901

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

16 FEB 19..

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ௵ பிப்ரவரி ௴ 4௨ [No. 5

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 81
2. தமிழ்ப்பாடம்
   நளவெண்பா—சுயம்வர காண்டம் 83
3. குன்றுடையானும் மக்களும்
   W. V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 86
4. அப்பர் (64 கலை—தர்க்கம்)
   E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 88
5. கம்பராமாயணம் (சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்)
   T. N. சேஷாசலம் B.A. B.L. 90
6. பெண்பாலார்—(ஷாபன்ஹூர் கட்டுரை மொழிபெயர்ப்பு) - K. இராஜகோபாலன் 92
7. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 1. களம் 3.)
   ஷேக்ஸ்பியர் நாடகம் 93
8. தினகர வெண்பா
   S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 96
9. வர்த்தமானம். 99

சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பிவைப்பதே நலம். அப்படிச்செய்யாத நண்பர்களுக்கு வி. பி. அனுப்பிவருகின்றோம். வி. பி. தம் கைக்கு எட்டியவுடன் அதனைப் பெற்றுக்கொள்ளத் தவறுவாராயின் எமக்கு மிகுந்த நஷ்டமாகும்.

தபால்கட்டணம் உயர்ந்திருப்பதால் மலேயே தென்னாப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு இவ்வாண்டிலிருந்து சந்தா ரூ. 9-8-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவ்விடங்களுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லையாதலின் அங்கிருக்கும் நண்பர்கள் விரைவில் தம் சந்தாத் தொகையை அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

மானேஜர்.

188153

கலாநிலயம்

நெஞ்சத்து நல்லன் யான்.

"செல்வத்திலே செல்வம் சிவகாருண்யம்" என்று உளமுருகி ஓதினார் ஒரு பெரியார். உண்மையில் உயர்ந்த தொன்றிற்கும் ஓர் விலையினுள் அடங்கி அளக்கக்கூடிய வகையில்லையாதலின், பொருளனைத்தும் விலையளவளவென அலைகின்ற இவ்வுலகம் கருணையை ஒரு செல்வமென மதிக்கா தொழிகின்றது. அறிவென்ற பெயரினால் செய்துவருகின்ற ஆராய்ச்சி முடிவுகளையும், உடைமை என்ற உணர்வினால் குவிக்கின்ற பொருள்களையும், உரிமையென்ற பரிவினால் உரைக்கின்ற சொற்களையும் செல்வங்களென்றென்று சிந்தித்திருக்கவே இக்காலம் எவ்விடத்தும் மக்கள் தூண்டப்பெறுவதாற்றான் வேண்டாத் துன்பங்கள் வாழ்க்கையை வந்து சூழ்கின்ற ஏழ்மைக் காளாகின்றோமென்பதைச் சலங்களுக்குத் தலைவராயிருந்து நடத்துதற்கு முற்படுபவர் எண்ணித்துணிய இனியேனும் இணங்காராயின் மனிதர்க்குரியபெருமையின் அருமையையேனும் அமைதியின் ஆற்றலையேனும் ஒருநாளும் அடையமாட்டோம். அறிவும் செல்வமன்று, உடைமையுஞ் செல்வமன்று, உரிமையுஞ் செல்வமன்று, மற்றிவ் வறிவு உடைமை யுரிமைகளாற் செலுத்தும் ஆற்றலும் செல்வமன்று. கருணை யென்பதொன்று கலந்தில்லையாயின் இவையனைத்தும் மனிதனுக்கடுக்கும் சுமவிறகுகளே யன்றி வேறல்ல. "கருணையென்பது கண்டறியாதவன் பரிணதன்கொல்—படுகொலையான்" என்றார் கம்பர். ஆன்மாவை இழந்தபின் இவ்வுலகெலாம் உன்னுடைமையாய்ப் பெற்றும் பயன் என்கொலோ, என்றோர் ஆங்கிலப் பழமொழி வினவும். உரிமையைப் பற்றி உரைக்கவந்த திருவள்ளுவர், "என்பும் பிறர்க்குரியர்" ஆதலே உரிமை என்று காட்டிய இலக்கணம் மறக்கற்பாலதோ! உள்ளி உள்ளவெல்லாம் உவந்தீயும் வள்ளியோராகின்ற இவ்வுரிமையை ஒருவரும் கவர்ந்துகொள்ள இயலாது. மீண்டுங் கம்பரே கட்டுரைத்துக் காட்டும்வண்ணம் "ஆற்றல் நல்லற மல்லது இல்லாமையால்" அவ் வாற்றலைச் செலுத்துதற்கு அறிவின் திறமையும் உடைமையின் மிகுதியும் உரிமையின் கருத்தும் ஒன்றும் வேண்டியதில்லையே.

அறிவினல் அமைதி யடைந்தவர் யாரே உளர்—(அறிவென்னும் சொல்லை இங்கு நாம் மெய்ஞ்ஞானம் என்னும் பொருளில் பயிலவில்லை;உலகத்தில் அறிவென்று பாராட்டப் பெறுகின்ற திறமைகளையே இங்கு உட்கொண்டு பேசுகின்றோம்).—அறிவின் வளர்ச்சியால் சுகப்பட்டவனும் இல்லை, சுகப்படுத்தினவனுமில்லை. மோட்டார்காரும் ரேடியோவும்போன்றுள எந்திர தந்திரச் சூழ்ச்சிகளுக்குரிய அறிவைப் பாராட்டி இவைகளாலன்றோ நாம் இவ்வளவு சுகம் பெறுகின்றோம், என்று மகிழ்வாரெல்லாம் வாய் வந்ததை வழங்கும் மாக்களேயன்றி ஆய்ந்தோய்ந் துரைக்கும் பெரியாரல்லர். இந்தத் திறமைகிடக்கப் பகுத்தறிவு என்று கூறப்பெறும் அதன் கதியும் இதனில் அதிகமன்று. நன்மைதீமைகளைப் பகுத்தறியும் சக்தியை அளிக்க வல்ல அவ்வொரு மரத்தின் கனியை மாத்திரம் தின்னலாகாதென்று கடவுள் நமது ஆதித் தாய்தந்தையர்களாகிய ஏவாளையும் ஆதாமையும் விதித்திருந்தாரென்றும் அதற்குமாறாக அவர்கள் அதனைத் தின்றதாற்றான் இவ்வுலகில் பாவமும் துன்பமும் வந்து சேர்ந்தனவென்றும் கூறுகின்ற இக்கிறிஸ்தவவரலாறு அடக்கிக்கொண்டிருக்கின்ற உண்மை உறவுற நோக்கி உணர்தற்பாலது.

உடைமையும் அவ்வாறே. உடைமைதான் சுகத்திற்கேதுவாயது ஒருவர் சரித்திரத்திலும் ஒருபோதுமில்லை. மனிதரைப் பற்றித் தம் அடிமைகள் ஆக்கிக் கொள்வதற்குப் பேய்கள் மெல்லமெல்லக் கொணர்ந்து பூட்டும் மாய விலங்கல்லவோ இவ்வுடைமைப் பொருள்கள். பேய்கள் நம்மை அடிமைகளாக்கிக்கொள்ளும் இம்முறைமையையே பின்பற்றி நாமும் மற்றவர்களை இவ்வுடைமைகளால் அடிமைகளாக்கிக்கொள்ள முயல்கின்றோம். இருபுறத்தும் தீதியற்றும் புன்மையுடைத்திவ் வுடைமைநிலை—தான் அடிமையாயிருப்பதால் அடைகின்ற தீமை ஒரு புறமும், மற்றவரை அடிமைகளாக்க முயல்வதால் இழைக்கின்ற தீமை மறுபுறமும் பற்றிப் பெரிதுழக்க வையகம் வாய்புலர்ந்து கையயர்ந்து சோர்கின்ற இப்பரிபவத்தைக் கண்ணாரக் கண்டிருந்தும் உடைமைகளைத் தேடியடைய உன்னுவாரோ உணர்வினல் உயர்ந்தோர்தாமே!

மற்றுமென்! இவ்வுடைமைகளை அடைவதற்காதாரமாகவே உரிமைகளும் வேண்டுமென்று எம்மருங்கும் எல்லோரும்நாடுகின்றனரே. பெரிதினும் இப்பெரிய பரிபவத்தையாரிடத் துரைசெய்தாறுவோம்! ஈதெல்லாம் "உன்னைப்போல் நானும் அடிமையாவதற்கு உரிமை வேண்டும்" என்று மன்றாடும் புன்மதியேயாகவன்றோ புகுந்துநோக்கினல் புலப்பட்டுத்தீர்வது இன்றியமையாததாகின்றது. உரிமையென்றொன்றை உன்னித் திரிந்தாரும் ஒருபோதும் எவ்வகைச் சுகத்திற்கும் ஏதுவானவர்களல்லர். எந்தத் தேயத்துச் சரித்திரத்தைத்தான் எடுத்து நோக்கினும் இந்த உண்மையே மலையிலக்காய் நிற்கின்றது; எனினும் இதனைப் பலர் குரங்குபற்றிய பாம்புபோல் காணமாட்டேன் என்கின்றனர்; கண்டவர்களிற் சிலர் வாலிழந்த நரியின் வழிவந்த மரபினராய் மற்றவர்களுக்குக் காட்டமாட்டேனென்கின்றனர். இவர்களுக்கிடையே, பேதைமாக்காள் உரிமைக்கவாவி ஊதை வீங்கவீங்கஉழன்று கிடக்க நேர்கின்றதே.

இதற்கெதிர், கருணையென்னுமச் செல்[illegible] கருத்தகத்தே வைத்து நினைக்குமளவி[illegible] துருகிப் பெருகிய தேன் உலகடங்கலும் பாய்ந்து தன்மய மாக்கிக்கொள்கின்றதே. தங்குறை தீர்வுள்ளாது உலகத்து நிறையிருளை நீக்க விரைகின்ற அத் தண்மதியினகத்திருக்கும் அமுதமும் இக்கருணையே. எவ்வுயிர் மாட்டுஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்தம் செல்வத்தினும் அரியதொன்றுளதோ. உரிமையைக் கேட்பவர் வெறும்வாயை மெல்கின்றவர், உடைமையைக் கொடுப்பவர் கொடுத்த அளவு இழக்கின்றார். கருணையோ பிறரிடத்தில் ஒன்றும் கேட்காது; கொடுக்கின்றபோதும் தானொன்று பெறுவதுபோலவே கருதி உவப்பதாகும். கொடுப்பதே பெறுவதாய் முடியுமக் காதலர்தம் முத்தம்போலாம் கருணை. எனினும், எடுத்தொருவருக் கொன்று கொடுக்கின்ற கருமம் கருணைக்கு இன்றியமையாத தன்று. கருணையுடையவர் கொடுப்பார் என்பது உண்மையாயினும் இதன் எதிர்நிலையாகிய, "கொடுப்பவர்களெல்லாம் கருணையுடையவர்" என்னும் வாக்கியமும் உண்மையென்றெண்ணலாகாது. எத்தனையோ பல,இழிந்ததும் அல்லாததுமான வேறுநோக்கங்களால் கொடைகள்புரியப்பெறுவதைக் கண்டுவருகின்றோமே.எனின், பொருள்கொடுத்தோ வேறு வகையிலோ நாம் பிறனொருவனுக்கு ஒருஉதவி செய்தோமெனின், அதன் உண்மைத்தன்மை இன்னதென்று முதலில் நாமே தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். கருணையாற் சுரந்தளித்ததோ அல்லது வேறோர்நோக்கத்தால் வலிந்திறுத்ததோ இக்கொடைஎன்னும் ஐயத்திற்குப் பெரும்பாலும் இடம் இல்லையெனினும், இவ்விரண்டின் எல்லையையும் தழுவி நிகழ்கின்ற சில ஈகைகளில் ஒருசிறிது மருட்சி இருத்தலுங் கூடும். கொடைகளிற் பற்பல 'வாய்க்கரிசி,' பற்பல கைக்கூலி. இன்னவைகளின் நோக்கத்தைப்பற்றிக் கொடுத்தோனுக்கேனும் வாங்கினவனுக்கேனும் யாதும் சந்தேகம் இல்லை. இவைகிடக்க, குறிப்பிட்டுக் காட்டக்கூடிய 'பிரதிப் பிரயோஜனம்' ஒன்றும் இல்லாவிடத்தும் புரிந்த கொடைகளெல்லாம் கருணையாற்றானே நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்னும் நியதியில்லை. தற்பெருமைக்காக விருக்கலாம், ஈத்துவக்கும் இன்பத்திற்காக இருக்கலாம், புகழிற்கு அவாவியதாக இருக்கலாம். இவைகள்தாம் கருணையின்காரியங்கள் ஆகா. இந்தநன்கொடைகளுக்குரிய பெருமையும்சிறுமையும் வேறு வேறு இலக்கணங்களில் அடங்கும். மற்றுக் கருணையாற் செய்ததென்று காணற்கு, ஈந்தவன் தன் மனத்தினை உற்றுநோக்குதல் வேண்டும். ஒருவனுக்கு ஓர் உதவி செய்தபின், தன்நெஞ்சத்து, "நல்லன்யான்" என்னும் நினைவு எழுமாயின், கருணையால் இயங்கியது அவன் மனம் என்று கொள்ளலாம். "கொலையும் களவும் கவறும்காமமும், புரிவேனல்லேன், ஆதலின் யான் நல்லவன்" என்று சிலர் எதிர்மறை வகையில் எண்ணிக்கொள்ளக்கூடிய நிலையினை இதனேடு மயங்கலாகாது. "இது செய்தேன் ஆதலின் யான் நல்லன்" என்று உடன்பாட்டுவகையில் தோன்றும்நினைவையே நாமிங்குக் கருணைக்கு அடையாளமாகக் காட்டுகின்றோமென்பது வெளிப்படை. இத்தகைய சோதனைச் சொற்களைக்கொண்டு கூவியழைத்தால் எத்தனை பேர் நெஞ்சம் 'ஏன்' என்னுமென்று எண்ணிப் பார்ப்பதே முன்னேற முயல்கின்ற மாந்தர்களின் முதற்கடன்—[illegible]எல்லாம் வாழ்க்கையில் தோற்றோம் என்பதைப் [illegible] விளம்பரங்களே.

தமிழ்ப் பாடம் 5.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[65-வது பக்கத் தொடர்ச்சி]

9. வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த [வளைத்
பூங்குவளைக் காட்டிடையே போயினன்—தேங்கு
தேனாடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

பதப்பிரிவு:—வாங்கு வளை கையார் வதனம் மதி பூத்த பூ குவளை காட்டு இடையே போயினன் தேன் குவளை தேன் ஆடி வண்டு சிறகு உலர்த்தும் நீர் நாடன் பூ நாடி சோலை புக.

அன்வயம்:-வண்டு,தேன்குவளை தேன் ஆடிச் சிறகு உலர்த்தும் நீர்நாடன், பூநாடிச் சோலைபுக, வாங்கு வளைக்கையார் வதனமதி பூத்த பூங்குவளைக் காட்டு இடையே போயினன்.

கருத்து:—நீர்வளம் பொருந்திய அந்நாட்டிற்கு அரசனாகிய நளன், பூக்களை விரும்பிச் சோலை புகுவதற்குப் போகும்போது வீதியின்கண் இவனைக்கண்டு மலர்ந்த நோக்கினராய் மாதர் இருபுறத்திலும் பார்த்திருக்கப் போயினன்.

பதவுரை.

வண்டு - வண்டுகள்
தேன் - மதுரமான
குவளை - குவளைமலர்களிலுள்ள
தேன் - தேனில்
ஆடி - குளித்து (பின் தமது)
சிறகு - சிறகுகளை
உலர்த்தும் - உலர்த்திக்கொள்ளும்
நீர் - நீர்வளம் மிகுந்த
நாடன் - நாட்டிற்கு அரசனான நளன்,
பூ - பூக்களை
நாடி - விரும்பி
சோலை - சோலையுள்
புக - புகுவதற்கு, (எண்ணிப் போகும் வழியில்)
வாங்கு - வளைந்த
வளை - வளையல்களை யணிந்த
கையார் - கைகளையுடைய மாதரது
வதனம் - முகமாகிய
மதி - சந்திரனில்
பூத்த - மலர்ந்த
பூ - அழகிய
குவளை - (கண்ணாகிய) குவளையின்
காட்டு - காட்டிற்கு
இடையே - நடுவிலே
போயினன் - போனன்.

விளக்கம்:—போயினன் - போனன் (பயனிலை). யார் போயினன்? நாடன் - நாட்டை உடையவன், நளன் (எழுவாய்). எப்படிப்பட்ட நாடு அது? நீர் நாடு - நீர்வளம் மிகுந்த நாடு, (அதை உடையவன் நீர் நாடன்). அந்த நீர்வளம் என்ன தன்மையது? உலர்த்தும் நீர் - உலர்த்திக்கொள்ளும் நீர்வளம். எது உலர்த்தும் நீர்? வண்டு உலர்த்தும் நீர். வண்டு எதை உலர்த்தும் நீர்? வண்டு சிறகு உலர்த்தும் நீர் - வண்டுகள் சிறகை உலர்த்திக்கொள்ளும்படி அவ்வளவு நீர் வளம். என்ன செய்து வண்டு சிறகு உலர்த்தும்? ஆடி உலர்த்தும் - குளித்து உலர்த்திக் கொள்ளும். எதில் ஆடி உலர்த்தும்? தேன் ஆடி - தேனில் குளித்து. எதனில் உள்ள தேன் ஆடி? குவளைத் தேன் ஆடி - குவளையில் உள்ள தேனில் குளித்து. அந்தக் குவளை எப்படிப்பட்டது - தேன் குவளை - இனிய குவளை. [இவ்வருணனையால் நாட்டின் வளம் எவ்வாறு விளங்குகின்றது? குவளை மலரில் ஊறிய தேன் வண்டுகள் குடிப்பதற்கு மாத்திரமல்லாமல் குளிப்பதற்கும் கூடிய அள்வு தேங்கியிருந்ததென்றால் அந்த மலர்களினது செழுமையும் அச்செழுமைக்குக் காரணமான நீரின் மிகுதியும் தெரிகின்றன] நீர்நாடன் எங்குப் போயினன்? இடையே - நடுவிலே. எதற்கு இடையே? காட்டிற்கு இடையே. என்ன காடு அது? குவளைக்காடு. இந்தக் குவளைகள் எங்கே மலர்ந்த மலர்கள்? மதிபூத்த குவளை - சந்திரனில் மலர்ந்த குவளை. குவளை மலர்ந்த மதி எது? வதனமதி பூத்த குவளை - முகமாகிய சந்திரனில் மலர்ந்த குவளை. யாருடைய வதனம்? கையார் வதனம் - கைகளையுடைய மாதர்களது வதனம். என்ன அணிந்த கையார் அவர்? வளைக்கையார்-வளையல் அணிந்த கையார். அந்தவளை எப்படிப்பட்டது? வாங்குவளை - வளைந்த வளை. [குவளை எது, மதி எது? குவளை - மாதர்களது கண். மதி - அவர்முகம். இதன் கருத்தென்ன? தன்னைக்கண்டு உவகையால் கண்களெல்லாம் மலர்ந்தவர்களாய் மதிபோன்ற முகமுடைய மாதர்கள் இருபுறமும் அடர்ந்துநிற்க நளன் சோலையைநோக்கி வீதிவாய்ப் போயினன்.]

விரிவுரை:—தேன் வண்டு முதலியன நீர்வளத்திற்கு அடையாளம். வண்டுகள் நக்குமாறு சிறிதே கசியும்தேனுள்ளன அல்லவாம் நிடதநாட்டு மலர்கள். வண்டுகள் முழுகும்படி பூக்களில் தேன் சுரந்திருக்குமென்றால் அம்மலரின் செழிப்பு எத்தகையதென்று எளிதில் தெரியவரும். மலரின் செழுமையினின்று செடி கொடி மரங்களின் வளர்ச்சியும், அவ்வளர்ச்சியினின்று,வற்றாதநீருடையதன்மையும் அந்நாட்டிற்கு இருந்தபடி அறிகின்றோம். நீராடிய மாதர்தம் கூந்தலை உலர்த்திக்கொள்வதுபோல் வண்டுகள் தேனில் ஆடிவிட்டுத் தம்சிறகுகளைக் கால்களால் உலர்த்திக்கொள்ளுமாம்.

நளன் பூக்கள் கொய்யவேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆசைப்பட்டுச் சோலையை நோக்கிப் புறப்பட்டான். அப்படிப் புறப்பட்டுப் போகும்போது ஒரு காட்டின் வழியாகப் போகவேண்டியிருந்தது. நாடன் பூ நாடிச் சோலைபுகக் காட்டுஇடையே போயினன். இப்படிக் கடந்துபோவதற்கு அவன் மனைக்கும் சோலைக்கும் இடையே தெருக்களல்லவோ இருக்கும், காடு எங்கிருந்து தெருவில் வந்தது என்றாலோ, அது மரக்காடு அன்று—குவளை மலர்க் காடுதான். குவளை பூப்பது குளத்திலன்றோ, தெருக்களில் எவ்விதம் காடாய் அடர்ந்து இருத்தல்கூடும் எனின், குளத்தில் பூக்கின்ற குவளையன்று இங்குக் காடானது. சந்திரனில் பூத்த குவளைகள் அவை சந்திரனில்கூட குவளை

மலருமா என்றால், உண்மைச் சந்திரனில் மலராதுதான்; உவமைச் சந்திரனில் மலரும். சந்திரன் எதற்குவமை என்பது பிரசித்தம். மாதர்களுடைய முகம், ஒளியினாலும் குளிர்ந்த தன்மையாலும் வடிவினாலும், முழுச்சந்திரனை ஒக்கும். ஆனால் மாதர் முகத்திலேதான் குவளை முளைக்குமோ ! இங்குக் குவளை என்பது உண்மையான குவளை அன்று, குவளைபோன்ற கண்களைக் குறிக்கின்றது. ஆதலால், நளன் குவளைக் காட்டின் வழியாகச் சோலைக்குப்போனான் என்றால், அவன் சோலையைநோக்கி வீதியின் வழியாகப் போனபோது இருபுறத்து மாளிகைகளிலும் மற்ற இடங்களிலும் இருந்த சந்திரன்போன்ற முக அழகுடைய மாதர் அவனதழகைக் கண்டு குவளைபோன்ற தம் கண்கள் மலரப் பார்த்திருந்தனர், என்பதுபொருள்.

இந்த மாதர்களை 'வாங்குவளைக்கையார்' என்று கூறியதில் ஒருஇனியசுவையிருக்கின்றது. வாங்குதல்,என்பதற்கு வளைதல் அல்லது வளைத்தல் என்று ஒரு அர்த்தம் உண்டு. இராமன் வில்லை வாங்கினான் என, வளைத்தல் என்னும் பொருளில் அந்தச்சொல் வழங்கப்படுவது யாவரும் அறிவர். வளையல் கையில் வளைந்திருக்குமாதலால், வாங்குவளைக்கையார், என்றதற்கு வளைந்த வளையல்களை அணிந்த கைகளையுடைய மாதர் என்று அர்த்தம் சொன்னோம். ஆனால் வாங்குதல், என்பதற்குக் கழலுதல் அல்லது நழுவுதல், என்ற வேறு அர்த்தமும் இருக்கின்றது. 'வளைவாங்கு கையார்' என்று அன்வயப்படுத்தி, வளைகள் நழுவி விழுகின்ற கையையுடைய மாதர் என்று சொன்னால் அர்த்தம் சிறக்கும். நளனுடைய அழகைக் கண்ணாரக்கண்ட மங்கையர் அவன்மேல் காதல் உற்று அவனை அடையமுடியாமையினால் அந்தக்கணமே உயிர் தளர்ந்து உடல்மெலிந்து சோர்ந்திட, அணிந்திருந்த வளையல் கையினின்றும் தாமே கழன்று விழுந்துவிட்டனவாம். தமிழ்க்கவிகள், காதல்நோய் உற்ற மாதர் உடல்மெலிந்துபோவதை அவர்களணிந்த கைவளையல்களாலேயே இந்தப்படி அளந்து காட்டுவது வழக்கம். 'விரல் ஆழி வளை ஆயிற்று அவட்கு' (காதலனைப் பிரிந்ததால் உடல்மெலிந்து மோதிரமே அவளுக்கு வளையலாகும்படி கையும் விரலும் சிறுத்து இளைத்துப்போயின) என்றார் ஒருவர். திருவிளையாடற் புராணத்தில், சிவபிரான், செருக்குற்றிருந்த சாருகவனத்து முனிவர்களின் இறுமாப்பை அடக்குமாறு ஆண்டிவேடம் பூண்டுசென்று பிச்சையெடுத்த விளையாட்டைக்கூறும் 'வளையல்விற்ற படலம்' என்னும் படலத்தில் (4-வது செய்யுள்) ஆண்டியாய்ச் சென்ற ஈசன் வீடுதோறும் நின்று பிச்சைகேட்க, அவனுக்குச் சோறுகொண்டு இடவந்த மாதர், அவனது அழகையும் பொலிவையும் கண்டு காமம்மிகுந்து, அவ்வளவிலே உடலும், உடலோடுகையும்இளைத்து அவனது பிச்சைப்பாத்திரத்திலேயே இட்ட சோறோடுகூட அவர்களது கைவளையல்களும் கழன்று விழுந்துவிட்டன என்னும் கருத்தில், "ஐயங்கொண் டணைவாரையர் பரிகலத் தைய மன்றிக் கையம்பொன் வளையும் பெய்வார்"என்று பரஞ்சோதி முனிவர் பாடியுள்ளார். எனவே, வாங்குவளைக் கையார், என்றதற்கு 'வளைகள் கழல்கின்ற கையுடைய மங்கையர்' என்று பொருள்கொண்டால், நளன் உலாச்சென்ற வீதியில் இருந்த மாதர் இவனைக் கண்களிக்கக் கண்டார்கள் என்பது மாத்திரமல்லாமல் அவன்மேல் காதலும் கொண்டனர், என்ற பொருளும் தோன்றும்.

குறிப்பு:— 1. அணி என்றால் என்னவென்றும், உவமையணி, ஒழித்துக்காட்டணி உயர்வுநவிற்சியணி இவைகளுக்கு உதாரணமும் முன்னே கூறினோம். இந்தச் செய்யுளில் வந்திருக்கிற 'வதனமதி' என்பதும் ஒரு அணி. அதற்கு உருவக அணி என்று பெயர். மதிமுகம், என்பது உவமையணி. மதிபோன்ற முகம் என்பது அதற்குப் பொருள். முகத்தை வருணிக்கக் கருதி அது சந்திரன் போன்று இருந்தது, என்று சொல்லும் போதே, சந்திரனும் முகமும் சில பொதுத்தன்மைகளால் ஒத்திருந்தாலும், சந்திரன் வேறு முகம் வேறு என்னும் நினைவு நம் மனத்தின் ஒருபக்கம் இருக்குமல்லவா. சிங்கம் அனைய வீரன், தேன் ஒக்கும் சொல்லினாள், என்னும் உவமையணிகளிலும் உவமையாகும் பொருளுக்கும் உவமிக்கப்படும் பொருளிற்கும் வேறுபாடு தானே தோன்றுகின்றதல்லவா. இப்படி இரண்டு பொருள்களுக்குப் பொதுவாகச் சில தன்மை இருக்கிறதென்று சொல்லுகின்ற சொற்களிலேயே, தன்மை பொதுவாக இருந்தாலும் அப்பொருள்கள் வேறு வேறே என்ற கருத்து அடங்கியிருக்குமானால் அப்பொழுது உவமையணி. இதைத்தான் ஆங்கிலத்தில் ஸிமிலி (Similie) என்பர். இவ்விதம் வேறு வேறு என்ற நினைவிற்கிடங்கொடுக்காமல் உபமானம் உபமேயம் ஆகிய இரண்டு பொருள்களும் ஒன்றே என்னும்படி கூறுவது உருவக அணி. இதை ஆங்கில இலக்கணத்தில் மெடபர் (Metaphor) என்பர். [he is cunning as a fox' is a simlie, while to say 'he is a fox' is a metaphor.] ஆதலால் 'மதிவதனம்' என்னாது 'வதனமதி' என்றால் உருவகம். மதிவதனம், என்னும் உவமத்தை விரித்தால், 'மதிபோன்ற வதனம்,' என்றாகும். ஆனால் 'வதனமதி' என்பதை விரித்தால் 'வதனம் ஆகிய மதி' என்று விரிந்து 'வதனமேதான் மதி' இரண்டும் வெவ்வேறு அல்ல என்ற கருத்துடன் அவைகளுக்குள்ள ஒற்றுமை பலப்படுகின்றது. "தன் மக்கள் பேசிய மொழித்தேன் பருகி இன்பக்கடலுள் ஆழ்ந்தான்" என்னும் உதாரணத்தில் மொழிகளாகிய தேன், இன்பமாகிய கடல், என இரண்டு உருவக அணிகள் இருக்கக் காண்க. இதே கருத்தை உவமையணியிற் சொல்லவேண்டுமானால் தன் மக்கள் பேசிய தேன்போன்ற மொழிகளைக் கேட்டுக் கடல்போன்ற (அளவில்லாத) இன்பத்தை அடைந்தான்' என வாக்கியம் மாறும்.

2. ஆகுபெயர் என்றால் என்னவென்று முன்னமே சொல்லி யிருக்கின்றோம். ஒரு வார்த்தை எதாவது ஒரு காரணத்தினால், சாதாரணமாய் அதனால் அறியப்படும் பொருளைக் குறிக்காமல் வேறொரு பொருளை உணர்த்தினால் அப்பொழுது அது ஆகுபெயர் என்று அழைக்கப்படும். மாது, காரிகை என்பன அழகு என்னும் தன்மைகள். அவைகளே அந்தத் தன்மையை உடைய காரணத்தினால் பெண்களைக் குறிக்குமானால் அப்பொழுது குண ஆகு பெயர். 'அந்த நாடு நன்றாக வாழ்கின்றது' என்றால், நாடு என்னும் இடம் நாட்டில் உள்ளவர்களைக் குறிப்பதால் இடஆகுபெயர். அவ்விதமே 'வதனமதி பூத்த குவளை' என்று இச்செய்யுளில் வந்த இடத்துக் 'குவளை' என்னும் மலர் 'கண்'

என்னும் உறுப்பை உணர்த்தி அந்த வேறு பொருளில் ஆகியிருப்பதால், ஆகு பெயர். எந்தக் காரணத்தால் குவளை என்பது கண் என ஆயிற்று ? கண் குவளையைப்போல் இருக்கும்காரணத்தால், அதாவது கண்ணுக்கு உவமை குவளை ஆதலால்.எனவே குவளை என்பது இங்கு உவமை ஆகுபெயர். 'ஜனகன்பெற்ற அன்னம், முனியொடு சென்ற முகிலை மணந்தனள்,' என்னும் வாக்கியத்தில், அன்னம் என்பது சீதையென்றும், முகில் என்பது இராமனென்றும் உவமையால் காட்டுவதால் உவமை யாகுபெயர்கள் ஆகின்றன.

10\. வென்றி மதவேடன் வில்லெடுப்ப வீதியெல்லாம்
தேன்றன் மதுநீர் தெளித்துவர—நின்ற
தளவேனன் மீதலரும் தாழ்வரைசூழ் நாடற்
கிளவேனில் வந்த தெதிர்.

பதப்பிரிவு :—மத வேள் தன் வில் எடுப்ப வீதி எலாம் தென்றல் மது நீர் தெளித்து வர நின்ற தளவு ஏனல் மீது அலரும் தாழ்வரை சூழ் நாடற்கு இளவேனில் வந்தது எதிர்.

அன்வயம் :--நின்றதளவு ஏனல்மீது அலரும் தாழ் வரைசூழ் நாடற்கு, மதவேள் தன் வென்றிவில் எடுப்ப, வீதி எலாம் மதுநீர் தெளித்துத் தென்றல் வர, இளவேனில் எதிர் வந்தது.

கருத்து :—நளன் சோலைக்குச் சென்றகாலம் வசந்த காலமாயிருந்தது.

பதவுரை.

நின்ற - (முல்லை நிலத்தில்) வளர்ந்த
தளவு - முல்லைக் கொடிகள்
ஏனல்மீது - (குறிஞ்சி நிலத்திலுள்ள) தினைப் பயிரின் மீது (படர்ந்து)
அலரும் - மலரப்பெற்ற
தாழ் - தழைத்த
வரை - மலைகள்
சூழ் - சூழ்ந்த
நாடற்கு - நாட்டையுடைய நளனுக்கு,
மதவேள் - மன்மதன்
தன் - தன்னுடைய
வென்றி - வெற்றி பொருந்திய
வில் - (காமபாணங்கள் எய்யும்) வில்லை
எடுப்ப - கையிலே எடுத்து மெய்க்காப்பாளனாக முன்போகவும்,
வீதிஎலாம் - தெருக்களிலெல்லாம்
மதுநீர் - தேனாகிய நீரை
தெளித்து - தெளித்துக்கொண்டு
தென்றல் - தென்றல் காற்று
வர - வருவதாகவும்
இளவேனில் - வசந்த காலம்
எதிர் - எதிரே
வந்தது - வந்தது.

இந்தச் செய்யுளில் வசந்தகாலம் என்பதை ஒரு அரசனாகவும், அந்த அரசன் சோலைநோக்கிச் சென்ற நளனை எதிர்கொண்டு அழைத்ததாகவும் கவி கூறுகின்றார். வசந்தகாலம் (Spring season) காதலுக்கு உரிய காலம். அரசன் சென்றால் அவனுக்கு முன்னர் மெய்க்காப்பாளன் (body guard) போவதும், வீதியில் நீர்தெளித்து வைப்பதும் வழக்கம். அவ்வாறே, வசந்தன் என்னும் அரசனுக்கு மன்மதனே மெய்காப்பாளனாக வந்தான் என்றும், தென்றல்காற்றே பூவில் உலவித் தேனைக் கொணர்ந்து வீதியில் நீராகத் தெளித்துவைத்ததென்றும் இங்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. மன்மதன் காமத்தை ஊட்டுபவன். தென்றல் அதை வளர்ப்பது.

விளக்கம்:—வந்தது (பயனிலை). எது வந்தது ? இளவேனில், (எழுவாய்). இளவேனில் எங்கு வந்தது? எதிர்வந்தது. யாருக்கு எதிரே வந்தது ? நாடற்கு - நாட்டையுடைய நளனுக்கு. எப்படிப்பட்ட நாடனுக்கு? சூழ்நாடற்கு-சூழ்ந்த நாடனுக்கு. எது சூழ்ந்த நாடற்கு ? வரை - மலை. சூழ்ந்தவரை எப்படிப் பட்டது ? தாழ் வரை - -தழைத்த மலை. எதனால் தழைத்த மலை ? அலரும் - மலரப் பெற்றதினால். எங்கே மலரப்பெற்றதினால்? மீது - மேல். எதன்மேல் ? ஏனல் மீது - (மலையில் வளர்ந்த) தினைப் பயிரின்மேல். எது ஏனல்மீது அலரும் ? தளவு - முல்லைக்கொடி. எந்த முல்லைக்கொடி ? நின்றதளவு - (முல்லை நிலத்தில் வேர் ஊன்றி)நின்ற தளவு. (முல்லை நிலத்திலே வேர் நின்று வளர்ந்த கொடி மலையின்மேலெல்லாம் படர்ந்து அதனில் உள்ள தினைப்பயிர்களின் மீது பூப்பதால் செழித்துத் தழைத்த மலை சூழ்ந்த நாட்டை யுடையவன் நளன்). இளவேனில் நாடற்கு எவ்வாறு வந்தது ? எடுப்ப வந்தது - எடுத்திருக்க வந்தது. எதை எடுத்திருக்க ? வில் - வில்லை. எப்படிப்பட்டவில் ? வென்றிவில்-வெற்றி கொள்ளும் வில். யாருடைய வில் ? தன் வில் - தன்னுடைய வில். யார் தன்னுடைய வெற்றிபொருந்திய வில்லை எடுத்திருக்க இளவேனில் நளனுக்கு எதிர்வந்தது ? மதவேள் - மன்மதன். இன்னும் எப்படியும் இளவேனில் வந்தது ? வர வந்தது - வரவும் வந்தது. எது வர - தென்றல் வரவும். தென்றல் என்ன செய்து வர ? தெளித்து வர. எதைத் தெளித்து வர ? நீர் - நீரை. என்னநீர் ? மது நீர் - தேனாகிய நீர்.

தென்றல் காற்றானது முன்னே தேனைத் தெளித்துக்கொண்டு போகவும், மன்மதன் ஏந்திய வில்லோடு கூடவரவும், வசந்தன் என்னும் வேந்தன் எதிர்கொள்ள வந்து நளனைச் சந்தித்தான்.

விரிவுரை:—தமிழ்க் கவிகள் ஒரு தேசத்தை நிலத்தின் தன்மைக்கு ஏற்றபடி நாலு அல்லது ஐந்து விதமாகப் பிரித்துக் கூறுவர். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி, காடும் காடடர்ந்த இடமும் முல்லை, ஊரும் வயலும் பொருந்திய இடம் மருதம், கடலும் கடற்கரைப் பாகமும் நெய்தல், ஆகிய நான்கு நிலங்கள். இவைகளில் ஏதாவது அழிந்துகிடக்குமானால் ஐந்தாவதாகிய பாலை என்னும் பெயர் பெறும். இப்படி ஐந்து விதமாகப் பிரிக்கப்பட்ட நிலங்களைப் பொருளிலக்கணத்தில் ஐந்து திணைகள் என்பர். தமிழ்க் கவிகள் ஒரு நாட்டை வருணிக்கும்போது குறிஞ்சித் திணை முல்லைத்திணை மருதத்திணை நெய்தல்திணை, என்னும் இந்நான்கு திணைகளையும் பற்றித் தனித் தனியாகப் பல செய்யுள்களால் முறையே பாடுவர். ஒவ்வொரு திணைக்கும், எந்தக் காலம் உரியது, எந்தத் தெய்வம் உரியது, அங்கிருக்கும் விலங்கு மரம் பறவை மலர்கள் எவை, அங்கே வழங்கும் இராகம் மேளம் வாத்தியம் எவை. அங்கு வசிக்கும் ஆடவர் பெண்கள் இவர்களது பெயரென்ன. அவர்களது தலைவன் தலைவியரை என்னவென் றழைப்பார்கள்,

மாந்தர்களது உணவும் தொழிலுமென்ன, அங்கே என்னவிதமான நிகழ்ச்சி நிகழும், என்பனபோன்ற எல்லா விஷயங்களையும் தமிழில் உள்ள பொருள் இலக்கணம் விரிவாகக் காட்டியிருக்கின்றது. நாடு ஒன்றை வர்ணிப்பதென்ருல் தமிழ்ப்புலவர்கள் இந்நான்கு திணைகளையும் தனித் தனியாக எடுத்து, அவர் அவ்வந்தத் திணைகளுக்குரிய பொருள்களின் மிகுதி தன்மை செயல் முதலியவைகளைப் புனைந்துரைத்துக் கொண்டாடுவர். அதன்பின், சில செய்யுள்களில், ஒரு நிலத்திற்கும் வேறு நிலத்திற்கும், பொருள்களாலாவது செயல்களாலாவது ஒரு சம்பந்தம் கற்பிப்பதுண்டு. முல்லைநிலத்தில் இரண்டு ஆடுகள் முட்டிக்கொள்ள அந்தச் சப்தத்தைக் கேட்டுப் பயந்து குறிஞ்சி நிலத்தில் மலையின்மீது படிந்திருந்த மேகங்கள் மின்னின என்று, முல்லைக்கும் குறிஞ்சிக்கும் கம்பர் சம்பந்தம் கற்பித்து உள்ளார். இப்படிச் சம்பந்தம் கற்பிப்பதற்குத் திணைமயக்கம் என்பது பெயர். இப்படி நிலங்களைத் தனித்தனியாய் வர்ணிப்பதும் திணைமயக்கமும் பெருங் காவியங்களின் உறுப்புக்களாம். ஆனல், நளவெண்பா சிறுகாவிய மாதலால், புகழேந்திப் புலவர் தனியாகச் சில செய்யுள் இவ்வுறுப்புக்களுக்கு என்று அமைக்காமல் கதையோடு சேர்ந்தே அங்கங்கு இரண்டொரு அடிகளினல் பல செய்யுள்களில் சொல்லிக்கொண்டு போகிருர். இந்தப் பாசுரத்தில், 'நின்றதளவு ஏனல் மீது அலரும் தாழ்வரை சூழ் நாடு' என்றமையால் திணைமயக்கம் தோன்றுகின்றது. தளவு - முல்லை, முல்லைத்திணைக்கு உரிய மலர். (அதனுல்தான் அந்த நிலத்திற்கு முல்லைநிலம் என்ற பெயர் வந்தது) ஏனல் - தினை, குறிஞ்சி நிலத்திற்கு உரிய பயிர். முல்லையிலிருந்த முல்லை குறிஞ்சியிலிருந்த தினைப்பயிரின் மீது படர்ந்தது, என்பதால் இருதிணைகளும் மயங்கிச் சம்பந்தம் ஏற்படுகின்றது. ஆதலால் திணைமயக்கம்.

குறிப்பு:—1. எடுப்ப, வர என்ற சொற்கள் வந்தது என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகின்ற வினையெச்சங்கள். 'சீதமதிக் குடைக்கீழ்' எனவரும் ஐந்தாவது செய்யுளினுரையில் வினையெச்சத்தின் இலக்கணமும் பொருளும் வரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. அங்குக் காட்டிய, "சூரியன் உதிக்க இராமன் வந்தான்" என்னும் உதாரணத்தைப்போல், இங்கு எடுப்ப வர என்னும் வினை யெச்சங்கள் உடன்நிகழ்ச்சிப் (ஒன்ருக நேர்வது) பொருளில் உபயோகப்படுவதைக் காண்க.

குன்றுடையானும் மக்களும்

[69-வது பக்கத் தொடர்ச்சி]

4. குன்றுடையான் மாமன்மாரை யடைந்து கலியாணம் செய்துகோண்டது.

குன்றுடையான் காடுமலைகளைக் கடந்து, கடுகி வழி நடந்து, இரண்டாம்நாள் மத்தியானம் மாமன்மார் அரண்மனையை அடைந்தான். சந்தனத்தாக் கவுண்டனும் குங்குமத்தாக் கவுண்டனும் வெள்ளிவள நாட்டுக்கு முதற்குடிகளாய் இருந்தமையால், அவர்கள் வசித்த அரண்மனையும் அவர்களுடைய பதவிக்கேற்பப் பெரியதாய், செல்வம் நிறைந்ததாய்க் கட்டுக் காவலோடுகூடியதாய்விளங்கிற்று.குன்றுடையான்சென்று அரண்மனைவாசலில் நுழைவதைக்கண்ட சேவகர்கள் அவனைத் தடுத்து, 'நீ யார், எங்கே போகிருய் ? என்ருர்கள். குன்றுடையான், 'என்னடா, கம்பளியையும் கவைக்கோலையும் காண, ஆள் இன்னுன் என்பது கூடத் தெரியவில்லையா ? நான் குன்றுடையாக் கவுண்டன்; மாமன்மார்களைப் பார்த்து உரிமைப் பெண் கேட்க வந்திருக்கிறேன். பெண் கொடுக்காவிட்டால், தடுத்து மறித்துக் கட்ட எனக்கு உரிமை உண்டு. வழி விடுங்களடா, நேரமாகிறது. மாமன்மார்களைப் போய்ப் பார்க்க வேண்டும்', என்ருன். இதைக்கேட்ட சேவகர்கள் திகைத்து நிற்கையில், அவனும் அதுவே சமயமென்று உள்ளே நுழைந்தான்.

நுழைந்தவன் எங்கும் நில்லாமல் நேரே சென்று, தன் மாமன்மார் உண்டியருந்தி, சந்தன தாம்பூலங்கள் தரித்து, சொக்கட்டான் ஆடும் மண்டபத்தை அடைந்து, அவர்களுடைய முறுக்குமீசைகளையும் வயிரக் கடுக்கன்களையும் பொன்மோதிரங்களையுங் கண்டு, இன்னது சொல்வதென்று தோன்ருமல் அவர்களுக்கெதிரில் இருந்த ஒரு தூணைப் பிடித்துக்கொண்டு நின்ருன். மாமன்மார் சூதாட்டத்தில் சிந்தை யாழ்ந்திருந்தமையால் குன்றுடையான் வந்திரிப்பதைப்பார்க்கவில்லை. ஆட்டத்தினிடையில் சந்தனத்தாக் கவுண்டன் திடீரென நிமிர்ந்து பார்க்கையில் அவன் நிற்கக் கண்டு, 'யாரடா, சேவகர்களே, ஏன் இவனை இங்கே நிறுத்திவைத்திருக்கிறீர்கள் ?" என்று அதட்டி, மீண்டும் ஆட்டத்தில் இறங்கினுன்.

குன்றுடையான், 'மாமா, நான் குன்றுடையாக் கவுண்டன்; பெண்கேட்க வந்தேன்' என்ருன். பெண் என்ற சொல்லைக் கேட்டவுடனே அண்ணன் தம்பிகள் பதற்றமடைந்து, இந்தப் பிச்சைக்காரப் பயல் யாரைப் பெண்கேட்கின்ருன் ? இவன் ஒரு பைத்தியகாரன்போல் தோன்றுகிருன். அடே சேவகர்களே, ஏனடா இன்னும் இவனை இங்கே வைத்திருக்கிறீர்கள் ?' என்று சினந்தார்கள். இரு சேவகர்கள் உருவிய வாளோடு ஓடிவந்து நிற்றலும் கவுண்டர்கள், 'இந்தப் பிச்சைக்காரனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்' என்ருர்கள்.

குன்றுடையான், 'மாமா, நான் உங்கள் மருமகன். பெண்கேட்க வேண்டுமென்று இரண்டுநாள் வழி நடந்து வந்தேன். உங்கள் பெண்ணைக்கட்ட எனக்கு உரிமையுண்டு,' என்று சொல்லுகையில், சேவகர்கள் அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளவே, அவன் அவர்களை எதிர்த்துக் கைதிமிறி, 'மாமா, பெண் கொடுக்காவிட்டால் நான் போகமாட்டேன். தடுத்து மறித்துக் கட்டஎனக்குரிமை உண்டு' என்று சொல்லிக்கொண்டு மாமன்மார் பக்கலில் வந்தான்.

கவுண்டர்கள், ஒருபிச்சைக்காரன் தங்களை 'மாமா' என்று அழைத்தமையாலும், விளையாட்டிற் கிடையூறு விளைத்தமையாலும், நாணமும் கோபமும்மேலிட்டவர்களாய் எழுந்து நின்று, அவனை அடித்துத் தள்ளும்படி ஏவினுர்கள்.சேவகர்கள் அவனைநையப்புடைக்கப்புடைக்க, அவன், உங்கள் மகள் மணப்பருவத்தை

அடைந்திருக்கிருளாம்.நான் ஓமந்தூரிலிருந்து பெண் கேட்க இரண்டுநாள் நடந்து வந்தேன். அவள் எனக்கு உரிமைப்பெண்' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், கவுண்டர்களுடைய தோட்டங்களைப் பார்க்கும் காட்டுப்பண்ணுடி கருப்பகவுண்டன் அங்கு வந்தான். அவனைக்கண்டு கவுண்டர்காள், 'எவனே ஒரு மாட்டுக்காரன் கொழுப்புமீறி உள்ளேவந்து மாமா என்று கூப்பிடுகிருன். பெண்கேட்க வந்தானும். பெண் கொடுக்காவிட்டால் தடுத்து மறித்துக் கட்டுவானும். எப்படியிருக்கிறது காரியம் ?' என்று சொல்லி நகைத்து, சேவகர்களை நோக்கி 'தள்ளுங்களடா'என்றனர்.

காட்டுப்பண்ணுடி குன்றுடையான்பால் விரைந்து சென்று, அவன் முகத்தை உற்றுப்பார்த்து, 'அடியாதீர்கள், அடியாதீர்கள். பொறுங்கள்! பொறுங்கள் ! என்று சேவகர்களைக் கையமர்த்தி, கவுண்டர்களை நோக்கி, 'இவன் சிற்ருலைப்பட்டணத்தில் வாழ்க்கைப்பட்டு இறந்துபோன உங்கள் தமக்கையின் மகன் என்று முகச்சாயலால் தெரிகின்றது. பொறுங்கள், கேட்டுப் பார்ப்போம்' என்று சொல்லி, குன்றுடையானது ஊர், பெயர், தாய்தந்தையர் பெயர் முதலியவற்றைக் கேட்டுணர்ந்து, 'இவன் உங்கள் தமக்கை மகனே. அவன் பெண்கேட்பதும் நியாயந்தான். உங்கள் மகளும் இவனுக்கு உரிமைப்பெண்ணே' என்ருன்.

கருப்பகவுண்டன் சொன்னதைக் கேட்டுக் கவுண்டர்கள் வியப்புற்று, குன்றுடையானது ஏழ்மையைக் கண்டு வெறுப்புற்று நிற்கையில் காட்டுப்பண்ணுடி, 'குன்றுடையாக் கவுண்டா, அப்புறம் பேசிக்கொள்வோம். என்னேடு வா, என் வீட்டுக்குப் போகலாம்' என்று சொல்லி, அவன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய்த் தன் வீடு சேர்ந்து, 'அப்பா, விசனப்படாதே; நீ இப்பொழுது இருக்கிற நிலைமையில் பெண்கேட்டால் யார் கொடுப்பார் ? கொஞ்சம் நல்லகாலம் வந்தபிறகு கலியாணம் செய்துகொள்ளலாம் அதுவரையிலும் நன்ருய்ச் சாப்பிட்டுவிட்டு என் வீட்டில் இருக்கிற நூறு ஆட்டுக்குட்டிகளையும் மேய்த்துக் கொண்டிரு' என்ருன். குன்றுடையானும் அவன் சொன்னதற் கிசைந்து ஆட்டுக்குட்டிகளை மேய்க்கலானுன்.

ஐயன் குன்றுடையான் வெள்ளிவள நாட்டில் கால் வைத்ததுமுதல் மாதம் மும்மாரி பெய்தது. செந்நெல்லும் சம்பாவும் மட்டின்றி விளைந்தன. ஓர் ஏர் பத்தேர் ஆயிற்று. பத்தாடுகள் நூறுடுகளாயின. பட்டி பெருகிற்று.

கருப்பகவுண்டன் அரண்மனைக்குப் போகிற வேளைகளில், குன்றுடையான் யோகசாலி யென்றும், அவன் வந்ததுமுதல் நாடு செழித்தது என்றும் கவுண்டர்களிடத்தில் சொல்வதுண்டு. அது கேட்டுக் கவுண்டர்களும் 'நல்லது, அவனை உன்னிடத்திலேயே வைத்திரு, பார்ப்போம்' என்று காட்டுப்பண்ணுடிக்குச் சொல்வார்கள்.

ஆறுமாதம் கழியுமுன் ஒருநாள் இரவு, குன்றுடையான் ஆடுமேய்த்து வந்து, சோறுண்டு, கருப்பகவுண்டன் வீட்டுத் திண்ணையில் கம்பளியை இழுத்துப் போர்த்துக் குறுக்கிப் படுத்திருக்கிற வேளையில் மீண்டும் ஒரு கனவு கண்டான். அக்கனவில் முன் தோன்றிய கிழப் பிராமணர்வந்து அவனைத் தட்டி யெழுப்பி, 'குன்றுடையாக் கவுண்டா, உனக்கு இன்னும் ஐந்து நாளில் கலியாணம் நடக்கும். நாளை அரண்மனைக்குப் போய் மறுபடியும் பெண் கேள்' என்று சொல்லி மறைந்தார்.

மறுநாட் காலையில் குன்றுடையான் தான் கண்ட கனவைக் கருப்பகவுண்டனுக்குச் சொல்லி, விடைபெற்று அரண்மனையை அடைந்து, மாமன்மார் முன்னிலையில் நின்று, 'மாமா, எனக்குப் பெண்கொடுங்கள்' என்ருன். மாமன்மார் பெண் என்ற சொல்லைக் கேட்டதும் கண் சிவக்க, மீசை துடிக்க, 'யாரடா, சேவகர்கள், இவனைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்' என்ருர்கள். இரண்டு சேவகர்கள் ஓடிவந்து குன்றுடையானைப் பிடித்துத் தள்ளுதலும் அவன், 'நான் போகமாட்டேன். தடுத்து மறித்துக் கட்டும் உரிமை எனக்குண்டு' என்று சொல்லிக் குறுக்கே படுத்தான். கவுண்டர்கள் இதைக் கண்டு மனக்கொதிப்புற்று, 'அடே' விலங்கு பூட்டி இவனை வண்டரிக்கும் மாளிகையில் போடுங்கள்' என்ருர்கள். சேவகர்கள் அப்படியே கைவிலங்கும் கால்விலங்கும் பூட்டிக் குன்றுடையானைக் கொண்டுபோய் வண்டரிக்கும் மாளிகையில் சிறையிட்டார்கள்.

அவ்வண்டரிக்கும்மாளிகைஎன்னும்அது,புதியகாற்றுநுழையாததாய், பகலவன் ஒளிபுகாததாய்,இருளுக்கும் கெட்ட காற்றுக்கும் அரிக்கும் பூச்சிகளுக்கும் உறைவிடமாய், கருங்கற்களால் கட்டப்பட்ட ஓர் பழைய கட்டடம். அங்குச் சென்றவர்கள் மீண்டு வந்ததில்லை. அதனுள்ளே தள்ளப்பட்ட குன்றுடையான் சிறிதுநேரம் இருட்டில் ஒன்றையும் பார்க்க முடியாமல் திகைத்தான். இதற்குள் அவன் முகத்திலும் தோளிலும் வயிற்றிலும் அங்குக் குடியிருந்த துரிஞ்சல்கள் மோதியடித்துப் பறந்தன. முகட்டில் ஒட்டிக்கொண்டிருந்த சில துரிஞ்சல்கள் அவன் தலையின்மீதும் உடம்பின்மீதும் தம் எச்சத்தைச் சொரிந்தன; ஈக்களும் எறும்புகளும் வண்டுகளும் உடம்பெங்கும் மொய்த்தன; பெரிய பல்லிகள் பாதங்களின்மீது ஊர்ந்து காலைப்பற்றி மேலே ஏறின; புருவங்களையும் கண்ணிமைகளையும் பற்றிச் சில பூச்சிகள் அரித்தன; மூக்கினுள்ளும் காதினுள்ளும் சில எறும்புகள் புகுந்துகுடைந்தன; கட்டையெறும்புகள் வெடுக்வெடுக்கென்று கடித்தன. குன்றுடையான் இவற்றினல் துன்புற்று, மருண்டு, ஓடி எடுத்துவைத்தலும் அங்கே மடிந்துகிடந்த மனிதர்களுடைய காய்ந்துலர்ந்த மண்டையோடுகளின்மேல் கால்பட, சறுக்கிக் கீழே வீழ்ந்து அடிபட்டு மூர்ச்சித்து, ஒரு நாழிகையானபின் சிறிது தன் உணர்ச்சியுற்றுக் கண்திறந்து பார்த்தான். தன்னைச்சுற்றியிருந்த பொருள்கள் சிறிது விளக்கமுற்றுத் தோன்றின. நீண்ட அக்கூடத்தின் தரை ஓதம்பட்டுக் காலில் ஒட்டிக்கொள்ளும் மண்ணையுடையதாய், குப்பை கூளம் நிறைந்ததாய் இருந்தது. மாண்டுபோன பல்லிகள், வண்டுகள், எறும்புகள், பூச்சிகள், மனிதர்கள் ஆகிய இவற்றின் உடல்கள் உலர்ந்து சிதைந்து அங்கங்கே குவியலாய்க் கிடந்தன. அக்கட்டடத்தின் மேல்சுவர்கள் சந்திக்கும் நான்கு மூலைகளிலும் சிலந்திப்பூச்சிகள் விரிந்த கூடுகளைக்கட்டியிருந்தன. அக்கட்டட முழுவதும் அழுகிப்போன உடல்களிலிருந்து வீசும் பிணநாற்றம் மூக்கைத் துளைத்தது.

குன்றுடையான் அம்மாளிகையில் அடிமேல் அடி வைத்து மெதுவாய் நடந்து சுற்றிப் பார்க்கையில், ஒரு மூலையில் அடிச்சுவரில் இருந்த கருங்கற்கள் பெயர்ந்து இடையே சந்துகள் புலப்படும்படி ஒன்றுக்கொன்று விலகியிருத்தலையும், அக்கற்களின் கீழே தலைகளை முன்னுக்கு நீட்டி இரண்டு பாம்புகள் படுத்திருத்தலையும் கண்டான். அப்பாம்புகள் குன்றுடையானை நோக்கிய வண்ணமாய் இருந்தன. அவனும் அவற்றை ஒருமுறை பார்த்தபின் தன் கண்களை அவற்றினின்றும் பெயர்க்க இயலவில்லை. தம்மைக் குன்றுடையான் கண்டுகொண்டான் என்ற உணர்ச்சி பாம்புகளுக்குத் தோன்றியவுடன் தமது நீண்ட உடல்களை வெளியே கொண்டுவந்தன. முழங்காற் பருமனான அவ்வுடல்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நிலைபெறாமல் கட்டவிழ்ந்து நெளிந்து சுருண்டன. அப்பாம்புகள் தம் தலைகளை முற்படக் கிடத்தி, பிளவு பட்ட நாக்குகளை வெளியே நீட்டி நீட்டி, இருமருங்கிலும் ஆய்ந்து பார்த்தன. குன்றுடையான் தனக்குக் கேடு சூழவேண்டுமாயின் அது இப் பாம்புகளாலேயே ஆதல் வேண்டுமென்பதை யுணர்ந்து, அவை தன்னை நெருங்காவண்ணம் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று உறுதிசெய்துகொண்டு, தன் கைவிலங்கையும் கால் விலங்கையும் ஓசையுண்டாகும் வண்ணம் தரையில் அடிப்பான். அவ்வோசையைக் கேட்டுப் பாம்புகள் மருண்டு வளையில் நுழைந்து உஸ் உஸ் என்று சீறும்; சிறிதுநேரங் கழித்து அவைகள் மீண்டும் வெளியே வரும்.

இராப்பொழுது வளர வளரக் குன்றுடையான் இருந்த நிலைமை சகித்தற் கரியதாயிற்று. பகற்பொழுதில் பாம்புகளின்மீதே கண்வைத்திருந்தவன், இருட்டில் அவற்றை நேரே காணாமையால், எங்கே அவை தனக்கு முன்னும் பின்னும் வந்துவிட்டனவோ என்றெண்ணித் துள்ளிப் பதைப்பான்; தன் பாதங்களின் மீது பல்லி யூர்ந்ததைப் பாம்பென்றெண்ணி அலறுவான். பாம்புகள் தன்னை அணுகாமலிருக்கும்பொருட்டுச் சிறிது விலகியிருந்த சுவருக் கருகுசென்று, அங்கே தலையிலும் முகத்திலும் சிலந்திவலை ஒட்டிக்கொள்ள, பூச்சிகளும் எறும்புகளும் உடம்பில் மொய்த்துக்கொள்ள, துரிஞ்சல்கள் உடம்பு முழுதும் எச்சமிட்டு நிறைக்க, கண்கள் அவ்விருட்டையும் ஊடுருவிப் பாம்பின் வளைமேற் செல்ல, பாம்புகள் தன்னயல் வாராவண்ணம் வாயாலும் கையாலும் காலாலும் ஓபாமல் ஓசைசெய்து, செல்லாண்டியம்மனை நினைந்து நினைந்து புலம்பிக் கண்ணீர் சொரிந்து, அவ்விரவு முழுவதையும் கண்கொட்டாமல் நின்றபடியே கழித்தான்.

மறுநாட் காலையில் மாமன்மார்களுடைய ஏவலால் இருசேவகர்கள் அவ் வண்டரிக்கும் மாளிகையை யடைந்து, கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள். இருளில் சிறிது நேரம் ஒன்றும் கண்ணுக்குப் புலப்படாமையால் நின்று, பின், அவர்கள் குன்றுடையான் பிணத்தைத் தேடுகையில் ஒரு மூலையில், இரவு முழுவதும் தூக்கமற்று, விழித்த கண் விழித்தபடி ஈயும் எறும்பும் மொய்க்க, துரிஞ்சலெச்சமும்சிலந்திவலையும் போர்வையாக, அலங்கோலமாய் நின்றிருந்த குன்றுடையானைக் கண்டு, அவன் உயிரோடிருத்தற்கு வியப்புற்று, அவனைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு அரண்மனைக்குப் போனார்கள்.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்—29. தருக்கம்

[76-வது பக்கத் தொடர்ச்சி]

(viii) தருக்கக்கலையின் மூவகை யடிப்படை

தருக்கத்திற்கு அடிப்படையானவை மூன்றாகும் அவையாவன:—உத்தேசம், இலக்கணம், பரீக்ஷை என்பன.

(1) உத்தேசமாவது பெயர்மாத்திரையாற்பொருளைச் சொல்வது இதை ஆங்கில தருக்கத்தில் "ஜட்ஜ மெண்டு" என்று கூறுவார். அதாவது உண்டு என்னும் ஒரு வாக்கியமே யாம். ஒரு பதத்தைக் கூறும் போதும் அதில் ஒருவாக்கியமே தொக்கி நிற்கும். "மலை" என்றகாலை இதோ தோன்றும் பொருள் மலை என்னும் வாக்கியம் அதனு ளடங்கிநிற்கும். ஆதலால் யாதொரு பொருளின் நாமங் குறிப்பினும், அது தன்மூலமாய் ஒருபொருளை யுணர்த்துந் தொழிலைச் செய்யாநிற்கும். "அறியவுணர்த்துறு பொருளை நாமம் மாத்திரையா லறைந்திடுதல் உத்தேச மென்பர்." ஆதலால் தனிப்பெயர் உத்தேச மன்று. அதனளவாலே உணர்த்தப்படும் தொழிலையே உத்தேசமென்பர். உலகத்திற் பிறந்த குழவிக்குக் காணப்படுவன யாவும் பிரமைபாய் நிற்கும் (பிரமை யென்பது தருக்கத்தில் யதார்த்த அநுபவம் என்று பொருள்தரும்.) இக்குழவியின் யதார்த்த அநுபவம் உலவழக்கத்திற் சொல்லப்பட்ட பிரமையா யிருத்தல் வெளிப் படையன்றோ? இதைத் திருநாவுக்கரசர் கீழ்வரும் பாசுரத்தில் விளக்குவதைக் காண்க:—

கருவுற் றிருந்தேன் கழலே நினைந்தேன் கருப்புவியிற்
றெருவிற் புகுந்தேன் றிகைத்தடி யேன்றன் றிகைப்
[பொழிவி !
யுருவிற் றிகழு முமையாள் கணவா விடிற்கெடுவேன்
றிருவிற் பொலிசத்தி முற்றத் துறையுஞ் சிவக்
[கொழுந்தே.

திருச்சத்திமுற்றம்—திருவிருத்தம் 5.

திகைப்பின் துன்பத்தை நீக்கவே, மாதாவும், பிதாவும், குருவும், வழிபடுகடவுளும் முறையே ஆசிரியர்களாய் நிற்க அவர்கள் வழிவரும் பிரமாண நிச்சயத்தால் உண்மையை உணரவேண்டியதாயிருக்கிறது. எனவே, உண்மை யென்பது நிலைபெற்று ஓரே தன்மையாய் உலகத்தில் இருக்க இயலாது. அப்போதைக் கப்போது அறிவின் விருத்தியோடு மாறிக்கொண்டே வருவதாகும். நேற்று உண்மையென்று சித்தாந்தம் செய்யப்பட்டவொன்று இன்று பூர்வபட்சம்செய்யப்பட்டுமற்றொன்றே உண்மையாக நிற்பதும், இதுவும் நாளைவரக் கழிக்கப்பட்டவோர் அசத்தே யாகி மற்றொன்றிற்கு வழிதருவதும் உலகவியல்பு. ஆதலால் உண்மை யாதென ஆராயப்புகுங்கால் தற்காலத்திற்கு வேண்டிய மட்டும் கண்ணுற்றுப் பரிசோதனைசெய்து அந்த அளவில் திருப்தியடைந்து மேல்நோக்கவேண்டுமே யன்றி, உலகஒழுக்கத்திற்கு மாறாக உண்மை நாடுவது கானலைப்பருகச்செல்வது போலாம். ஏனெனில் நமது வாழ்க்கையில் பிரமாணத்திற்கு மூலகாரணமான தாயார், தந்தை, உபாத்தியாயர் இவர்களும் "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" போல் நிற்பதால், குற்றமற்ற பரம்பொருள் நமக்குக் குருவாய் ஞானமுணர்த்தும்வரையில், உலகத்தோடு ஒத்துவாழ்தல் இன்றியமையாததன்றோ?

ஒப்பாயிவ் வுலகத்தோ டொட்டி வாழ்வா
னென்றலாத் தவத்தாரோ டடனே நின்று
துப்பாருங் குறையடிசி றுற்றி னத்துன்
றிறமறந்து திரிவேனைக் காத்து நீவந்
தெப்பாலு நுண்ணுணர்வே யாக்கி யென்னை
யாண்டவனே யெழிலானைக் காவா வானே
ரப்பாவுன் பொற்பாத மடையப் பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே?

திருவானைக்கா - திருத்தாண்டகம் 3.

என்பர் அப்பர். எப்பாலும் நுண்ணுணர்வு வருவதன்முன்னர், நமக்குச் சுற்றமுள்ளோர் அறிவும் அநுபவமும் அடிப்படையாய் அன்னோர் வாக்கே பிரமாணமாய் நாம் உலகவாழ்வின் ஆரம்பத்தில் காணப்படும் பொருள்களை உத்தேசம் செய்கின்றோம். அவ்வாறு உத்தேசம் செய்தஅக்கணமே இலக்கணம் இப்பொருளுக்கு இதுவென வற்புறுத்துகின்றோம். (இது ஆங்கிலேய தர்க்கத்தில் S is P if M....என்னும் வாய்பாட்டில் கூறப்படும்). அதை ஆராய்வோம்.

ii இலக்கணமாவது சிறப்பியல்பு. ("Definition is per genus differentia" என்பர் ஆங்கிலதர்க்க சாஸ்திரிகள்). மாந்தரில் சைவருக்குச் சிறப்பியல்பு அடியில் வருமாறு. அங்ஙனம் விளங்குவோர் சைவர்; ஏனையோர் சைவரல்லாதவர்:—

இலங்காலஞ் செல்லாநா ளென்று நெஞ்சத்
திடையாதே யாவருக்கும் பிச்சை யிட்டு,
விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு,
மெய்யன்பு புகப்பெய்து, பொய்யை நீக்கித்
துலங்காமெய் வானவரைக் காத்து நஞ்ச-
முண்டபிரான் அடியிணைக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

திருக்கன்றாப்பூர் - திருத்தாண்டகம் 4.

மாடு முதலிய நாற்கால் விலங்குகளினின்று பிரித்துக் காட்டும் ஆட்டின் இலக்கணம் அலைதாடி முதலியன உடையதென்பதுபோல், ஏனைய மாந்தரினின்று உண்மைச் சைவர்களைப் பிரித்து உணரக்கூடியஇலக்கணங்களைமேல்கூறிய பாசுரங்காட்டும். சிவாலயம் செல்வோர் சைவரெனில், இக்காலத்தில் சைவரல்லாதார் சிவாலயம் செல்லக்கூடியவரா யிருப்பதால் கொம்புடையது ஆ என்பதுபோல் அதிவியாப்தி என்னும் குற்றத்தின்பாற் படும். கல்வியிற் சிறந்தோர் சைவரெனில், கல்லாதார் பலரும் சைவராதலின், ஏகதேச இலக்கணமானதால் அது அவ்வியாப்தி என்னும் குற்றத்தின்பாற் படும். திருடர்கள் சைவர் என்றால் அது அசம்பவமென்னும் குற்றத்தின்பாற்படும். பிறர் பொருளை வௌவ எண்ணுகின்றவன் எக்காலத்தினும் சைவன் ஆகான். ஆதலால் இம்மூவகைக் குற்றங்கள் வாராமற் காத்து, மேற்கண்ட பாசுரமானது சொரூபம் தடத்தம் என்னும் இருவகை நல்லிலக்கணத்தின்படி சைவத் தன்மையை வகுத்துக்காட்டும் இவற்றுள் சொரூப இலக்கணம் (statical qualities) * யாதெனின், அன்பு, அறிவு, சிவத்தியானம் ஆகிய இவைதாம் சிவனடியார்க்குள்ள சொரூப இலக்கணமாம். திருநீற்றுக்கோலமும், அக்குப் பூண்டிருத்தலும், சீலமும், சுசியுடைமையும் அவ்வாறேயாம்.

வெப்பத் தின்மன மாசு விளக்கிய
செப்பத் தாற்சிவ னென்பவர் தீவினை
யொப்பத் தீர்த்திடு மொண்கழ லாற்கல்ல
தெப்பற் றும்மிலே னெந்தை பிரானிரே.

மனத்தொகை—திருக்குறுந்தொகை 7.

சிந்திப் பார்மனத் தான்சிவன் செஞ்சடர்
அந்தி வானிறத் தானணி யார்மதி
முந்திச் சூடிய முக்கண்ணி னனடி
வந்திப் பாரவர் வானுல காள்வரே.

சித்தத்தொகை—திருக்குறுந்தொகை 1.

துன்பெ லாமற நீங்கிச் சுவத்தரா
யென்பெ லாநெக் கிராப்பக லேத்திநின்
றின்ப ராய்நினைந் தென்று மிடையறா
வன்ப ராமவர்க் கன்பரா ரூரரே.

திருவாரூர்-திருக்குறுந்தொகை 4.

மேற்கண்ட செய்யுட்களில்சிவனடியார்சொரூபலட்சணம் விளங்கும். சொரூபலட்சணம் பொதுவில் எப்போதுமிருப்பதாய் மற்றவற்றினின்றும் வேறுபிரித்தறிவதாய் இருத்தலும்வேண்டும். ஒருகாலத்திருப்பதாய் வியாவர்த்தகமாய் (மற்றவைகளினின்று வேறுபிரித்து அறியக்கூடியதாய்)எதுஇருக்கின்றதோ அது தடஸ்த லட்சண மென்று கூறப்படும். ஈகைத்தன்மை, முதலிய குணங்கள் ஏனையோரிட மிருப்பினும், சைவர்களின் ஈகைக்கு உவமையின்று — இயற்பகை நாயனார் சிறுத்தொண்டர் முதலானோர் ஈகைக்கு ஈடுண்டோ—ஆயினும், இத் தடஸ்தலட்சணம் அன்னோர் குணமாயினும், ஒவ்வொரு காலத்திலே விளங்குமேயன்றி, உலகத்தில் சதா காணப்படுவதன்று. எந்த வள்ளலும், ஊணுறக்கமின்றி, ஒருநாளைக்குள்ள இருபத்தினான்கு மணிநேரங்களும் தானஞ்செய்துகொண்டேஇருக்கப்போகிறதில்லை. இயற்கையில் தொக்கியும், சமயம் வாய்க்கும்போது வெளிப்படையிலும் காணப்படும் இலக்கணமே தடஸ்த லட்சணமாம். அதாவது இயக்கத்தில் காணப்படும் இலக்கணமென்பர் (இதை ஆங்கிலத்தில் Dynamic quality என்பர்.) இவ்விலக்கணத்தை உபலட்சண மென்று எண்ணுவாருமுண்டு. ஆயினும், சீர்தூக்கில் தடத்த இலக்கணமே வஸ்து நிர்ணயத்திற்கு வலிய ஆதாரமாகும். சிவனடி-

* நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோ
மேமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரநற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமார்க்கே நாமென்று மீளா வாளாக்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 1.

யார் தடஸ்த லட்சணத்தைத் திருநாவுக்கரசர், திருமறமாற்றத் திருத்தாண்டகத்தின் 10-வது பாசுரத்தில் விளக்குவது காண்க :—

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
மாவாவென் றெமைபாள்வா னமரர் நாத
னயனெடுமாற் கரிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் றனே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலும்
குணமாகக் கொள்ளோமெண் குணத்துள் ளோமே

இவ்வாறு காணப்படும் இலக்கணம், தடஸ்தமாயினும் சரி சொருபமாயினும் சரி, அது உடன்பாட்டாலும் விளக்கப்படலாம்; அன்றி எதிர்மறையாலும் விளக்கப்படலாகும். சைவர்களின் தடஸ்தநிலையை உடன்பாட்டுமுறையில் அப்பர் விளக்குவதைக் காண்க :—

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சய போற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதி யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே.

திருவாரூர்—திருத்தாண்டகம் 3.

சைவரல்லாதாரது தடஸ்தலட்சணத்தைஎதிர்மறையிற் காட்டுவதும் காண்க:—

திருநாம மஞ்செழுத்துச் செப்பா ராகிற்
றீவண்ணர் திறமொருக்காற் பேசா ராகி
லொருக்காலுந் திருக்கோயில் சூழா ராகி
லுண்பதன்முன் மலர்பறித் திட்டுண்ணாராகி
லருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி
லளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே.

தனித் திருத்தாண்டகம் 6.

மற்றும் சைவரை எதிர்மறைத் தடஸ்த லட்சணத்தில் அப்பர் விளக்குவதைக்காண்க:—

மாற்றேனெழுத்தஞ்சு மென்ற னாவின்
மறவேன் றிருவருள் வஞ்ச னெஞ்சி
னேற்றேன் பிறதெய்வ மெண்ணு நாயே
னெம்பெருமான் றிருவடியே யெண்ணினல்
மேற்றானீ செய்வனகள் செய்யக் கண்டு [லான்
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளுநாளும்
ஆற்றே னடியேனை யஞ்சலென்னாய்
யாவடுதண் டுறையுறையு மமர ரேறே.

திருவாவடுதுறை - திருத்தாண்டகம் 2.

iii பரீட்சை—இலக்கணம் இது இலக்கியத்திற்குப் பொருந்துமோ பொருந்தாதோ என்று பார்ப்பது பரீட்சையாகும். இனி, தருக்கத்தில் பரீட்சை எவ்வாறு செய்யவேண்டும் என்பதும், அதற்குத் தக்க கருவிகள் யாவை என்பதும், அவற்றை உபயோகிக்கு முறை இன்னவென்பதும் பின்னர்க் காண்போம்.

—————

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—2. சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்.

[77-வது பக்கத் தொடர்ச்சி]

துறவினிற் பெரியதோ துறக்கத் தின்பமே.

வான்மீகர் நூலின்படி சரபங்கமுனிவன் பிரம்மலோகஞ் சேர்தற்கிசைந்த வரலாற்றிற் கயலில் கம்பர் கூறுகின்ற வரலாற்றையும் கருத்துட்கொண்டக்கால், அங்ஙனே வடநூலினின்று வடித்தெடுத்துக்கொள்ளப்பெற்ற இம்முனிவன்பெருமை தமிழெனும் நலத்தினால் உயர்கின்ற வண்ணம் உணர்தற்பாலதாம்:—

குரவங்களனைய மரங்களின் நன்மணம்வீசும் வனத்தினை விராதனை வீழ்த்தியவவ் வீரர் சேர்தலும், இரவிலுங் குவியாதஆயிரந் தாமரைக்கண்களுடையவனும்,

வானிற் பொலிதோ கையர்கண் மலர்வண்
கானிற் படர்கட் களிவண் டொடுகார்
மேனித் திருநா ரதன்வீ ணையிசைத்
தேனிற் பொலியுஞ் செவிவண் டுடையான்

[கருத்த தன்மேனியில், தேவலோகத்தில் விளங்குகின்ற மங்கையர்களது கண்களாகிய வளப்பமுடைய மலர்க்காட்டில் மொய்க்கின்ற தன் கண்களாகிய களிவண்டுகளுடனும், நாரதமுனிவரது யாழின் இசையாகிய தேனைப்பருகி விளங்குகின்ற தன் காதுகளாகிய வண்டுகளையும்,]

திசைகட் டியமால் கரிதெட் டமதப்
பசைகட் டினகிட் டினபற் பலபோர்
விசைகட் டழிதா னவர்விட் டவர்பே
ரிசைகட் டியவொத் திவர்சா மரையான்

[திக்குக்களில் கட்டிய பெரிய யானைகளின் தெளிந்த மதநீர்ப்பசையொடு கூடினவாகி, எதிர்த்த பல போர்களில் தம் வலியும் உறுதியும் அழிந்து தோற்றுப்போன பற்பல அசுரர்களது பெரிய கீர்த்தியை அவர்களினின்று நீக்கிக் கட்டியது போன்று வீசுகின்ற சாமரையையும்]

செற்றிக் கதிரிற் பொலிசெம் மணியின்
கற்றைச் சுடர்விட் டெரிகஞ் சுகியான்
வெற்றித் திருவின் குளிர்வெண் ணகைபோற்
சுற்றிக் குளிருஞ் சுடர்தோள் வளையான்

[பதிக்கப்பட்டுச் சூரியனைப்போல் விளங்கும் சிவந்த மணிகளின் ஒளித்தொகுதி விட்டு விளங்குகின்ற கவசத்தையும், ஜயமகளின் குளிர்ந்த வெண்மையான புன்சிரிப்பைப்போல் சுற்றிலும் பிரகாசிக்கின்ற தோள்வளைகளையும்]

உடைய இந்திரன் வந்துநிற்க, சரபங்கன் அவனை எதிர்கொண்டு தன்பால் வந்தவாறு ஏன்னென வினவுதலும், அவ்வாசவன்,

நின்னை யியனீ திநெடுந் தவமின்
றென்னை யும்விளம் பரிதென் றுணர்வா
னந்நான் முகனின் னையழைத் தனனாற்
பொன்னார் சடைமா தவபோ துதியால்

[பொன்சடையுடைய மாதவனே, உன்னாற் செய்யப்பட்ட முறைமையுடைய பெரிய தவமானது, எவ்வளவு சிறி

தும் தன்னால் இன்று இயம்ப இயலாதுஎன்று பிரம்மதேவன் உணர்ந்து, உன்னைத் தன் உலகத்திற்கு வரும்படி அழைக்கின்றான். ஆகையால் வருவாயாக]

எந்தா யுலகியா வையுமெவ் வுயிருந்
தந்தா னுறையுந் நெறிதந் தனனா
னந்தா தபெருந் தவநா டதுநீ
வந்தா லெனினின் னெதிரே வருவான்

[பெரியோய், எல்லா உலகங்களையும் உயிர்களையும் படைத்த பிரம்மதேவன் தங்குகின்ற பதவியை உனக்குக் கொடுத்தான். குறையாத பெருந் தவத்தால் பெறுகின்ற நாடாகிய அதற்கு நீ வந்தால் பிரம்மதேவன் உன்னை எதிர்கொண்டு அழைத்தேக வருவான்]

எல்லா வுலகிற் குமுயர்ந் ததையான்
சொல்லா வகைநீ யுணர்தொன் மையைபா
னல்லா யுடனே நடநீ யெனலு
மல்லே னெனவா லறிவா னறைவான்

[அது எல்லாவுலகிற்கும் உயர்ந்ததென்பதையான் சொல்லாமலேஉணர்ந்துகொள்ளவல்ல தொன்மையை உடையை நீ, ஆதலின் நல்லவனே, உடனே வருவாயாக—என்று (இந்திரன்)கூறலும்''நான் வரமாட்டேன்''என்று தத்துவஞானமுடைய அம்முனிவன் கூறுவானாகி]

சொற்பொங் குபெரும் புகழோய் தொழின்மாய்
சிற்பங் களின்வீ வனசேர் குவெனே
அற்பங் கருதே னெனருந் தவமோ
கற்பம் பலசென் றதுகா ணுதியால்

[சொல்லுக்கு அடங்காத பெரும் புகழையுடைய இந்திரனே, செய்த தொழில் அழிகின்ற சித்திரங்களைப்போல், நாளடைவில் அழிகின்ற இடங்களை நான் அடைவேனோ? அத்தகைய அற்பமானபதவிகளை நான் மனத்தாலும் நினைக்கமாட்டேன். நான் செய்த அருந்தவமோ பல கற்பகாலங்கள் கடந்தது காண்]

சொற்றந் தரமன் றிதுசூழ் கழலாய்
பெற்றும் பெறுகில் லதொர் பெற்றியதே
மற்றென் பலசொல் லிவண்வந் ததவ
முற்றும் பகறா னுமுடித் தனனால்

[கட்டிய கழலை உடையவனே, இந்த வார்த்தை நீ என்னிடத்தில் சொல்லத்தகுந்ததன்று. அப்பிரம்மலோகம்பெற்றும் பெறாததற்கு ஒப்பானதே. வேறு பல வார்த்தைசொல்வானேன். என்தவம் முற்றும்வரையில் பலகாலம் அதனைச் செய்து முடித்தேன்]

சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகா நெறியெய் துவன்வா னுடையாய்

[தேவலோகத்தை யுடையவனே, காலம் என்னும் சிறிய வரையறை இல்லாமலும், நிலைமை மாறாமலும், குறுகுதலும் நீள்தலும் இல்லாமலும், குணம் வேறுபடாமலும், பிரளயகாலத்தில் உண்டாகும் பெரிய காற்றினால் எல்லாப் பூதங்களும் அழிந்தாலும் தான் அழியாமலும், உள்ள அப்பெரும் பதவியை நான் அடைவேன்]

எனத் தன் தவத்தின் மிகுதியையும் மனத்தின் உறுதியையும் அரிய மாதவங்கள் ஆற்றிய அச்சான்றோன் சரபங்கன் இந்திரனுக்கு எடுத்துச்சாற்றினான். நாரதன் வருடும் நல்லியாழ் கேட்டருள் அத்தெய்வச் செவிகளின்வாய் இத் தத்துவமொழிகள் எவ்வகை இசைத்தவோ, இயம்புத லெளியதன்று.

இதற்கிடையில், இந்திர னவண்போந்துளனென்பதுணர்ந்த இராமன், சீதையையும் இலக்குவனையும் அப் பூம்பொழிலின் புறமேநிறுத்தித் தான் தனியே அவ்விடஞ் சார்தலும்,

கண்டா மலையா யிரமுங் கதுவக்
கண்டா மரைபோல் கருஞா யிறெனக்
கண்டா னிமைபோ ரிறைகா சினியின்
கண்டா னருநான் மறையின் கனியை

[தேவர்களுக்குத் தலைவனான இந்திரன், இப்பூமியில் காண்பதற்கரிய நான்மறையின் கனியாகிய இராமனை, தாமரைபோன்ற கண்களுடைய ஒரு கரிய சூரியனைக் கண்டாற்போல, தன் ஆயிரம் கண்களும் கதுவக் கண்டான்]

கா ணா மனநொந் துகவன் றனனா
லா ணா தனையந் தணர்நா யகனை
நாணா ளும்வணங் கியநன் முடியாற்
றாணா கியதோள் கொடவற் றெழுவான்

[கண்டு மனம்நொந்து கவலைப்பட்டவனாய்—புருஷோத்தமனும் அந்தணர் தலைவனும் ஆகிய நாராயணனை எப்பொழுதும் வணங்குகின்ற தன் அழகிய தலையாலும் தூண் போன்ற கைகளாலும் இராமனை வணங்கினான்]

வணங்கிய இந்திரன் இராமனை வழுத்திய வாய்மைகள் பலப்பல; அவை பின்னர்.

இளகிய உளத்தினின்றெழுந்த வளமொழி பல கொண்டு பாவிய புரந்தரன் விடைபெற் றகன்றபின், இராமபிரானைச்சரபங்கன் தன்குடிலிற்கொண்டழைத்தேகி உபசரிக்க இரவுதீர்ந்து மறுநாட் புலர்தலும்,

ஆயிடை யறிஞனு மவனெதி ரழுவத்
தீயினை நுழைவதொர் தெளிவினை யுடையா
னீவிடை தருகென நிறுவின னெறியாற்
காயெரி வரன்முறை கடிதினி னிடுவான்

[அப்பொழுது அம்முனிவனும், இராமனுக்கு எதிரே, வளர்த்த தீயினுள் நுழைவதாகிய ஒரு ஒப்பற்ற தெளிந்த அறிவை உடையவனாகி, காய்கின்ற நெருப்பை முறைப்படி விரைவில் வளர்த்து இராமனை நோக்கி ''நீ விடை தருக'' என்றனன்.]

வரிசிலை யுழவனு மறையுழ வனைநீ
புரிதொழி லெனையது புகலுதி யெனலுந்
திருமக டலைவசெய் திருவினை யுறயா
னெரிபுக நினைகுவெ னருள்கென விறைவன்

[கட்டமைந்த வில்லுடைய இராமன், வேதங்களில் வல்ல சரபங்கனை நோக்கி, ''நீ செய்கின்ற இக்காரியம் என், அதைச்சொல்'' எனக்கேட்க, அம்முனிவன், ''திருமகள் நாயகனே, நான் தவம்செய்த பாக்கியத்தை அடைவதற்கு நெருப்பில் மூழ்க நினைக்கின்றேன், விடைதந்தருள்க,''என, இராமன்].

தான் வந்தவிச் செவ்வியில் இக்காரியம் செய்வதேனென மீண்டும் வினவவே, முனிவன்,

ஆயிர முகமுள தவமபர் குவெனு
னீயிவண் வருதிகொ லெனுநிலை யுடையேன்
போயின விருவினை புகலுறு விதியான்
மேயினை யினியொரு வினையிலை விறலோய்

[வெற்றியுடைய இராமா, பலவகைபட்ட தவங்களைச் செய்து வருந்துகின்ற நான், நீ இங்கு என்றைக்கு வருவாயோ என்னும் எண்ணமுடையவனா யிருந்தேன். இனி என் இருவினைகளும் நீங்கின. வருகின்ற விதியின்படி நீயும் வந்தனை, இனி எனக்கு இங்கு ஒருகாரியமும் இல்லை]

இந்திர னருளின னிறுதிசெய் பகலா
வந்தனன் மருவுதி மலரய னுலகந்
தந்தன [illegible] லை னுரவோய்
[illegible] யல்வேன்

[வலிமையுடையவனே, நேற்றுமாலை இந்திரன் இங்கு வந்து ''தாமரையில் தோன்றிய பிரம்மன் தன் உலகத்தை உனக்குக் கொடுத்தனன், அங்குவந்து தங்குவாயாக'' என்றனன். பரமபதத்தை அடைய முயல்வேனாகிய நானோ அங்குச் சென்றேனல்லன்]

ஆதலி னிதுபெற வருளென வுரையாக்
காதலி யவளொடு கதழெரி முழுகிப்
போதலை மருவின னொருநெறி புகலா
வேதமு மறிவரு மிகுபொரு ளுணர்வோன்

[எவராலும் சொல்லப்படாத வேதங்களும் அறிவதற்கு அரிய மேலான பொருளை உணர்ந்த சரபங்கன், ''ஆதலால் இப்பரமபதத்தை நான் பெறும்படி அருள்செய்'' என்று உரைத்துத் தன் மனைவியோடு, வேகமுடைய நெருப்பில் இறங்கி ஒப்பற்ற பரமபதத்தை நாடினனாய்]

தேவரு முனிவரு முறுவது தெரிவோர்
மாவரு நறுவிரை மலரயன் முதலோ
ரேவரு மறிவினி னிருவினை பொருவிப்
போவது கருதுமவ் வருநெறி புக்கான்

[வருவது அறிபவர்களாகிய பெருமைவாய்ந்த நன்மணமுடைய தாமரையில் தோன்றிய பிரம்மன் முதலிய தேவர்களும் முனிவர்களும் மற்றையோரும் தம் ஞானத்தால் இருவினைகளையும் நீக்கிப் போவதற்கு எண்ணும் அவ் வரிய பரமபதத்தைச் சேர்ந்தான்]

என்று இயம்பிவந்த கம்பர்பெருமான், இச்செய்திகளையெல்லாம் உட்கொண்டு,

அண்டமு மகிலமு மறிவரு நெறியா
லுண்டவ னொருபெய ருணர்குந ருறுபே
றெண்டவ நெடிதெனி னிறுதியி லவனைக்
கண்டவ ருறுபொருள் கருதுவ தெளிதோ

[அண்டங்களையும் அவைகளில் அடங்கியவைகளையும் அறிவதற்கரியதோர் வகையில் பிரளயகாலத்தில் உண்டருளிய இராமனது ஆயிரம்பெயர்களில் ஒருபெயரை உணர்ந்தவர் அடையும் பாக்கியம் நினைப்பதற்கும் இயலாத பெரியது என்றால், அந்திமகாலத்தில் அவ்விராமனை நேரே கண்டவர் அடைகின்ற பதவி நம்மால் நினைப்பதற்கு எளியதோ]

என்னும் பாசுரத்தால், சரபங்கன் சரிதத்தோடு இப்படலத்தையும் இனிதின் முடிக்கின்றார்.

இந்திரன் வந்ததற்கு தன்னருந் தவத்தின் பயனை வடமொழிவழி மொழிகிய சரபங்கர் ஏற்றுக்கொண்டினிது துய்க்க அதனைத்தான் தமிழ்மொழியில் மறுத்துவிட்ட முறையே இவ் விருபெரும் நாகரிகங்களுக்கு மிடையேயுள்ள வேற்றுமையை விளக்கிக் காட்டுகின்றது. பிற்றைநாள் அச்செம்மையை அமைவுற ஆராய்வோம்.

பெண்பாலார்

[Arthur Schopenhaur on WOMEN]

[74-வது பக்கத் தொடர்ச்சி]

முன்னும் பின்னும் பெரிதுபார்க்காமல் அவ்வப்போதைய விடயங்களில் கருத்தை நிறுத்திக்கொள்கின்ற பெண்மையிலுள்ள குற்றங்குறைகள் யாவதாயினும், ஓரோவழி நன்மையும் அதன்பாலுளதென்றும் இயம்புதற் கியலும். ஏனெனில், தற்போதைய நிலை தாங்கத்தான் கூடியதாயின் மங்கையர் அதனை மனமார அனுபவித்துக்கொள்கின்றனர். மாதர்க்கே சிறப்பான அம்மகிழ்வு இந்தக் குணத்தினின்றே பிறக்கின்றது. இதனால், ஆடவர் விளையாட்டயரும் வேளைகளில் உவகையளிக்கவும், கவலையின் பாரத்தால் தளருங்கால் ஆறுதல் அளிக்கவும் பெண்பாலார் தகுதியுடையவராகின்றனர்.

பண்டைய நாட்களில் ஜர்மனிய நாட்டினர் செய்ததுபோல், இக்கட்டுடைய விடயங்களில் மாதர்களுடன் ஆலோசனை செய்வது நேரிய முறையென்றே நினைக்கின்றேன். ஏனெனில், ஒன்றினை உற்றுநோக்கி ஆராய்வதில் மாதர்களுக்கும் ஆடவர்களுக்கும் வேற்றுமை பெரிதுளது. எண்ணிய கருமத்தை எய்துதற்குப் பெண்கள் குறுக்குவழி ஏதுவென்று நாடுங் கொள்கையினர்: தம் எதிரில் இருப்பவைகளில் நாட்டத்தை நிலைக்கவைக்கும் தன்மை அவர்களுக்குண்டு. ஆடவனோ எனின், தன் மூக்கிற்குமுன்னே இருப்பதைத் தான் பார்ப்பது ஏன் என்ற பான்மையால் தூரத்திலிருப்பவைகளிடத்தே தன் பார்வையைச் செலுத்த நினைக்கின்றான். இத்தகைய நிலைகளில், புருடர்களது பார்வையை அலையவொட்டாமல் திருத்தி அருகிலுள்ள நேர்முறையைக் கருதுமாறு உதவவல்லவர் மாதர்களே.

இதுவுமன்றி: விடய நிர்ணயங்களில் மாதரார் ஆடவர்களைக் காட்டிலும் நிதானபுத்தி அதிகம் உடையவர். ஆதலால், அவர், ஒருவிடயத்தில் அடங்கியிருப்பவைகளைக் காட்டிலும் அதிகம் பார்ப்பதில்லை. ஆடவர்களோ, தங்கள் மனம் காமக்குரோதாதிகளால் கிளர்கின்றபோது, இல்லாதவைகளை இருப்பனபோலும், இருப்பவைகளை பெரிதுபடவும் மதிக்கப் புகுகின்றவராகின்றார்.

காரணகாரிய முறைப்படி ஒன்றினை ஆராயவல்ல புத்தியின் திறமை வளராதிருக்கின்ற இதுவே, மாதர்கள் எளியோர்பால் ஆடவர்களைக் காட்டிலும் அதிகம் இரக்கமுடையவர்களாய், அன்போடும் ஆர்வமோடும் அவ்வெளியவர்களை ஆதரிப்பதற்கும், இதற்கெதிர், நீதி மானம் மனச்சாக்ஷி யாகியவைகளில் மாதர் புருடர்களைக்காட்டிலும் குறைந்திருப்பதற்கும் ஒருங்கே காரணமாகின்றது. ஏனெனல், புத்தியின் இவ்வாராய்ச்சித்திறமை மெலிந்திருப்பதாற்றான் தற்போதைய விவகாரங்களை அவர்களை இறுகப் பற்றிக்கொண்டுவிடுகின்றன. தம் கண்களுக்கு நேரெதிரே காணப்படும் பொருள்களுக்கே மாதர் ஆளாகின்றனர். கண்டதையே கொண்டு குலவுகின்ற இந்தத் தன்மையானது, கருத்தின் கொள்கைகளாலும் ஒழுக்கமுறைகளாலும் மனவுறுதியாலும், மற்று, பொதுப்பட உரைக்குங்கால், ஐம்புலன்களுக் கெட்டாமல் முன்னும் பின்னுமாகி, நிற்கின்ற எவ்வகை எண்ணங்களாலும், திருத்தியமைக்கப்பெறுவதில்லை. இதனால், நற்குணம் அமைவதற்கேற்ற முதலும் முக்கியமுமான அம்சங்களை மாதர்கள் உடையவர்கள் என்பதும், மற்று அதனை அமைப்பதற்குரிய கருவிகளாய்ச் சார்ந்துவரவேண்டிய தன்மைகளிலோ குறைந்தவர்கள் என்பதும் புலப்படும்.

நியாய அநியாயங்களின் உணர்ச்சியின்மைதான் பெண்மைக்குலத்தின் அடிப்படையான குற்றம் என்பதை இங்கிதுகாறும் உரைத்தவைகளால் தெரிந்துகொள்ள இயலும். விடயங்களை ஆழ்ந்து சிந்தித்து ஆராயவல்ல ஆற்றலின் குறைவிலேயுமன்றி, மெல்லியலார் என்ற பான்மையில் இயற்கைத் தெய்வம் மாதர்களை வைத்துள்ள நிலையிலும் இக்குற்றத்திற்குரிய காரணத்தை ஒருவாறு காணலாம். வலிமை இல்லையாதலின் தந்திரச்சூழ்ச்சிகளைத் தமக்குத் துணையாகக் கொள்கின்றனர்: உண்மையல்லாத உரைகளே அவர் நாமுதல் நிற்பதும், எதற்கும் முதலில் தந்திரத்தையே அவர் நாடுவதும் இதனாலேயே இயற்கையாகின்றன. சிங்கத்திற்குப் பல்லும் நகமும், யானைக்குத் தந்தமும், எருதிற்குக் கொம்பும், கணவாய் மீனிற்குக் கரிய மைப் பையும்,* அவ்வவற்றின் தற்காப்பிற்கு எவ்வண்ணம் அமைந்திருக்கின்றனவோ, அவ்வண்ணமே, உள்ளொன்று வைத்துப் புறமொன்று காட்டும் கபடத்திறமையை மாதர்களின் தற்காப்பிற்கென்று இயற்கைத் தெய்வம் அவர்களுக்கு அளித்திருக்கின்றது. உடலின் திண்மையாலும் புத்தியின் நுண்மையாலும் புருடனுக்குக்கொடுத்திருக்கும் ஆற்றலை, கைதவத்தின் உருவமாக மாற்றிப் பெண்களுக்கு இயற்கைத்தெய்வம் கொடுத்திருக்கின்றதென்று கொள்ளல்வேண்டும். ஆதலின், சாமர்த்தியசாலிகளாகட்டும் அசடுகளாகட்டும், பெண்கள் என்று இருப்போர்க்கெல்லாம் இந்தக் கபடம் உடன்பிறவியாய் அமைந்திருக்கின்றது. கொம்பு பல் முதலியவைகளைக்கொண்டு விலங்குகள் தம்மை எதிர்த்தவைகளினின்று காத்துத் தடுத்துக்கொள்வதுபோலவே, பெண்பாலாரும் இந்தக் கபடதந்திரங்களின் உதவியால் தம்மைக் காத்துக்கொள்ளமுயல்வது இற்கையே; அவ்வாறு செய்வதில் தங்களுடைய உரிமையையே தாம் கையாள்கின்றனர் என்னும் எண்ணம் அவர் மனத்தில் எழுகின்றது. ஆதலின், முற்றிலும் உண்மையுடையளாய், கபடங்கள் பயிலாத பெண்ணொன்பாள் ஒருத்தி இருக்கக்கூடுமென்பதே இயலாததொன்றும். மற்றவர் கபடத்தை மிகவிரைவில் ஊடுருவிப் பார்த்துவிடுவார் பெண்பாலார் ஆதலின் அவர்களை வஞ்சிக்கப் புகுவது மதியீனமே. நான் கூறிய இவ்வடிப்படையான குற்றமானது அதற்கினமான மற்றவைகளுடன், பொய் வஞ்சனை துரோகம் நன்றி நினையாமை ஆனையவைகளை விளைவிக்கின்றது. நீதிமன்றங்களில், பெண்பாலாரே பெரும்பாலும் ஆண்பாலாரைக்காட்டிலும் அதிகமாய்ப் பொய்க்கரி கூறுகின்றவராகின்றார். பெண்களைச்சத்தியம் செய்யவைத்துத்தான் என்னபயன் என்று கேட்கலாம். குறைவொன்றுமில்லாத மாதர்கள், ஒருவரும்பார்க்காதிருக்கின்ற சமயம்நோக்கிக் கடைகளிலிருந்து பொருள்களைக் களவுசெய்துகொண்டு போய்விடுகின்ற வழக்கமுண்டென்பது எல்லாத் தேயங்களிலும் அடிக்கடி தெரியவருகின்றது.

*கரிய மை சுரக்கும் பையொன்று காணவாய்மீன் என்னும் ஒரு சாதி மீனின் வயிற்றில் உளது. இதனைப் பிடித்துத்தின்ன வேறொரு சந்து தூரத்தும்போது, இது அந்தப் பையில்சுரந்திருக்கிற மையை தனக்குப்பின் நீரில் பாய்ச்சிவிடும். இதனால் நீர் இரண்டுவிட, இம்மீன் தன் பகையின் கண்ணிற்குத் தென்படாமல் ஓடி மறைந்துகொள்ளும்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[73-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 1. களம் 3.

இடம்:— உரோமாபுரியில் ஒரு வீதி. இடியும் மின்னலும். உருவிய வாளுடன்
காஸ்க்கா ஒரு புறம் வர, ஸிஸிரோ எதிர்ப்புறம் வருகின்றான்.

ஸிஸிரோ:—காஸ்க்கா, வந்தனம். ஸீஸரை நீ வீட்டிற்குக் கொணர்ந்தாயோ? ஏன் உயிர்ப்பற்றிருக்கின்றாய்? இப்படி நீ விழிப்பதற் கென்னகாரணம்.

காஸ்க்கா:—இம் மண்ணகம் முழுவதும் தன்னிலையழிந்து நடுங்கிக்குலைய நீதான் அசைதலில்லையோ? ஓ, ஸிஸிரோ! காழ்முதிர்ந்த கருங்காலி மரங்களை வெடுவெடு வெனச் சினந்து பிளக்கும் கடுங்காற்று எத்துணையோ இதன்முன் பார்த்துளேன்; பயமுறுத்தும் புயலளவு உயர்தற் கவாவிய சாகரம் பொங்கி வெகுண்டு நுரைத்திடவுங் கண்டுளேன்; எனினும் இவ்விரவுவரையில், இதுகாறும், யான் அனல்பொழியும் கடுங்காற் றென்றினூடு ஒருபோதுஞ் சென்றதில்லை. விண்ணுலகில் கலகம் நடக்கின்றதோ, மற்று, இம்மண்ணுலகம் தெய்

எந்தக் காரியத்திலும் மனம்மொழி மெய் என்னும் இம் மூன்றும் கலந்திருக்கின்றன. மனதால் நினைப்பதும், நினைத்ததை வாயாற் சொல்வதும், சொல்லியதைப் பிறகு கையாற் செய்வதும் பொதுவாக ஒரு கருமம் நிகழ்கின்ற முறையாகும். இந்த நாடகத்தின் செய்கை ஸீஸரின் வதை. இவ்வதத்திற்கு ஆதாரமான மனநிலையை ஷேக்ஸ்பியர் காட்டிக்கொண்டுவருகின்றார். அதுதான் அழுக்காறென்பது இதுகாறும் உரைத்தவைகளினின்று வெளிப்பட்டிருக்கும். ''வளரும் இறகுகளை ஸீஸரின் சிறகினின்று பறிக்கவேண்டு''மென்றான் ப்ளேவியஸ். 'இந்த ஸீஸர் வெற்றிமாலையைத் தானே தனியாய்ச் சூடுவதோ' என்று நைகின்றான் காஸ்ஸியஸ். இவ்விருவர்களில் ப்ளேவியஸ் தன் சக்திக்கேற்றபடி ஸீஸரின் உருவச்சிலையினின்று வெற்றிச்சின்னங்களைப் பறிக்கச்சொன்னான் எனின், காஸ்ஸியஸ் என்ன செய்யச் சொல்கின்றான் என்பது இதுவரையில் தெரியவில்லை. ஜூனியஸ் ப்ருடஸ்

வங்களை மிகமிக அவமதித்து அழிவுடைய கேடுகளை அவர் அனுப்புமாறு வெஞ்சின மூட்டுகின்றதோ - யாதோ இது. (1)

ஸிஸிரோ:—இதனிலும் அதிசயம் எதுவேனுங் கண்டாயோ நீ.

காஸ்க்கா:—ஓர் அடிமை - பார்த்தாலவனைத் தெரியுமுனக்கு - தன், இடக்கையை உயர்த்த, இருபது தீவர்த்திகளை ஒன்றாய்ச் சேர்த்ததுபோல் அது சுடர்விட் டெரிந்தது; எனினும், அவன் கையோ சூட்டினை யுணர்வதின்றிப் பொசுங்காமலிருந்தது. அன்றியும் - அப்பொழுது உருவியுயர்த்திய என் கத்தியை இன்னும் நான் தாழ்த்தவில்லை - நகரச் சபைமண்டபத்திற் கெதிரே ஓர் சிங்கத்தைக் கண்ணுற்றேன்; அது என்னை உக்கிரமாக நோக்கி உருமிக்கொண்டே யாதும் எனக்கு இடர் இழைக்காமற் போய்விட்டது: பயத்தினால் வேறுபட்டுப் பிணங்கள்போல் நூறுபெண்கள் ஒருத்திமேல் ஒருத்தி விழுந்து குவிந்துவிடக்கின்றனர்; அவர், முற்றிலும் தீப்பற்றி யெரிய மனிதர் பலர் தெருவிலே அங்குமிங்கும் நடக்கத் தாம் கண்டதாகச் சத்தியம் செய்தனர். நேற்று, கங்குற் பறவை, (2) நண்பகலில் சந்தைக் கூடத்தின்மேல் உட்கார்ந்து கிறீச்சென்று அலறிக்கொண்டிருந்தது. இவ்வுற்பாதங்களெல்லாம் இப்படி ஒன்றுசேரும்போது, "இன்னவைகளின் காரணங்கள் இவையிவை - இவை தாம் இயற்கையே" என்றெவரும் இயம்பவேண்டா. (3) அவைகளுக்கு இலக்காகிய தேசத்தின் நாசத்தை முன்னறிவிக்கும் தீக்குறிகளே அவை என்றுயான் நம்புகின்றேன்.

ஸிஸிரோ:—ஆம், அற்புதக் கோலமுடையதே இக்காலம். மனிதரோ விடயசங்கற்பங்களினின்று முற்றிலும் வேறாக, தத்தம் இட்டப்பிரகாரம் பொருள்கொள்கின்றனர். நாளைச் சபை மண்டபத்திற்கு வருகின்றானோ ஸீஸர்? (4)

காஸ்க்கா:—வருகின்றான். நாளைக்கவன் அங்குச் செல்வானென உனக்குச் சொல்லியனுப்பும்படி ஆண்டனியை ஏவினன். (5)

ஸிஸிரோ:—விடைகொள்கின்றேன், காஸ்க்கா, குழம்பிக்கிடக்கும் இவ்வானம், நடப்பதற் குரியதன்று.

காஸ்க்கா:—செல்க, ஸிஸிரோ.

[ஸிஸிரோ போகின்றான்]

[காஸ்ஸியஸ் வருகின்றான்]

காஸ்ஸியஸ்:—யாரது?

காஸ்க்கா:—ரோம்நகரத்தா னொருவன்.

காஸ்ஸியஸ்:—உன் குரலால் - காஸ்க்கா நீ.

காஸ்க்கா—உன் செவி செவ்விதே. (6) காஸ்ஸியஸ், என்ன இரவு இது!

காஸ்ஸியஸ்:—உத்தமர்கள் நனி உவக்கும் ஓர் இரவே இது. (7)

காஸ்க்கா:—இப்படியும் வானகம் பயமுறுத்த என்றைக்கே யார்தான் அறிந்திருந்தார்?

காஸ்ஸியஸ்:—குற்றங்கள் எவ்வளவோ இவ்வுலகில் நிறைந்திருக்கின்ற தென்பதைத் தெரிந்துகொண்டிருப்பர் (8.) என் வரையில் நானோ, விபத்துடைய இவ்விரவிற் காளாகித் தெருக்களில் திரிந்திருந்தேன். காஸ்க்கா, இவ்வண்ணம் என் அங்கியை விலக்கி, இடியேற்றிற் கென் மார்பினைத் திறந்து காட்டினேன். நீலநிறம் வீசும் கவைதரு மின்னல், (9) வானின் மார்பைப் பிளப்பது போன்றபோது அவ்வொளிக்கும் குறிக்கும் நேரே என்னை நிறுத்திக் கொண்டேன். (10)

காஸ்க்கா:—எற்றுக்கோ இத்துணை நீ விண்ணினை வருந்தியழைத்தாய் (11) அலகிலா ஆற்றலுடைய கடவுளர் அடையாளங்களால் நம்மைத் திகைக்கச் செய்ய இத்தகைய தூதர்களை யனுப்புங்கால் அஞ்சி நடுங்க வேண்டுவதன்றோ மாந்தர் கடன். (12)

காஸ்ஸியஸ்:—நீ பொரு மந்தன், காஸ்க்கா; உரோமனிற் கிருக்கவேண்டிய அவ் வுயிர்ச்சுடர் உனக்கில்லை; அல்லது இருந்தும் நீ பயில்வாயல்லை. (13) விண்ணின் இப் பொறுமைபற்ற விபரீதத்தைக் கண்டு நீ முகம்விளர்த்து விழிமருண்டு, பயம் பூண்டு வியப்பினுள் வீழ்கின்றாய். (14) இந்த நெருப்பெல்லாம் ஏன், (15) வழுக்கிவீழும் இந்தப் பேய்களெல்லாம் ஏன், பறவைகளும் விலங்குகளும் தத்தம் குலத்தினின்றும் இனத்தினின்றும் ஏன், முதியோர் மதியற்றும் இளைஞர் கணித்தும் (16) ஏன், இவைகளெல்லாம், தத்தம் வரன்முறையினின்றும் இயற்கையினின்றும், விதித்த கருமங்களினின்றும் விபரிதங்களாக மாறுவதுஏன்; ஏன், ஏதோவோர் கோரமுடைய நிலைமைக்குறித்து அச்சுறுத்தி எச்சரிக்கும் கருவிகளாக்குமாறு இவைகளுக்கு இத்தன்மைகளை வானவர் புகட்டியது, நீ காண, இது ஏன். இடிப்பதும் மின்னுவதும் கல்லறைகளைத் திறப்பதும் சபைமண்டபத் தருகிருந்த சிங்கம்போல் கர்ச்சிப்பதும் (17) ஆய இக் கொடிய இரவிற்கே நிகரான மனிதனொருவன் பெயரை, காஸ்க்கா, இப்பொழுது வேண்டுமெனின் நானுனக்குச் சொல்லவல்லேன். செய்கையில், நின்னிலும் என்னிலும் ஆற்றலொன்றும் அதிகம் இலனுயினும், வெடித்தெழும் இவ்விபரிதத் தோற்றங்களேபோல், பொல்லாங்கு புரியுமொரு பயங்கரமாய் வளர்ந்துளான் அவன். (18)

என்பவன் பண்டைக்காலத்தில் டார்க்வின் என்னும் அரசனை உரோமாபுரியிலிருந்து அடித்துத் துரத்திய செய்தியைப் புருடஸிற்கு இப்பொழுது இவன் நினைவுபடுத்துவதிலிருந்து, ஸீஸரையும் அவ்வாறே ஊரினின்று ஓட்டிவிட்டாற் போதும் என நினைப்பவனாயினும் ஆகலாம். அவ்வளவுதான் தன்னுடைய சக்திக்கு இயலும் என்று எண்ணினன் போலும் இவன். எனினும், இவனுடைய சீடன்போல் நின்ற ப்ருடஸ் தன்னுடைய சக்தி இன்னும் அதிகமாதலால், ஸீஸரைக் கொல்லவே வேண்டும் என, பின்னர்க் கூறுவானாயினன்.

(1) அரசனுக்கேனும் பெரியவர் எவர்க்கேனும் கேடு வருமுன் தோன்றும் உற்பாதங்கள் உரோமாபுரியிலும் தோன்றின. சரித்திரத்தை ஒட்டியே ஷேக்ஸ்பியர் இவைகளைக் கூறுகின்றாரேயொழிய முற்றிலும் இவை கவியினுடைய கற்பனைகளல்ல. தேவர்கள் தங்களுக்குள் இகலி மேலுலகத்தில் போர்செய்வதால் இப்படியெல்லாம் நிகழ்கின்றனவோ, அல்லது, இப் பூவுலகிலுள்ளவர்கள் தேவர்களை மிகவும் நிந்திக்க அத்தேவர் சினங்கொண்டு இந் நெருப்புமழை முதலியவைகளால் மனிதரை நாசஞ் செய்யப் பார்க்கின்றனரோ என்பது இறுதி வாக்கியத்தின் கருத்து.

(2) கங்குல் பறவை - ஆந்தை. இது பகலில் தோன்றுவது தீச்சகுனம் என இந்நாட்டில்போல் அந்நாட்டிலும் கருதப்படுகின்றது.

(3) இத்தகையவைகள் தெய்வங்களால் விளைக்கப்படுமேயன்றி, இயற்கைச் சம்பவங்கள் ஆகமாட்டா. வேறெக் காரணத்தால் அல்லாமற்போயினும் இன்னவைகளைக் கண்டபின்னேனும் தெய்வங்களுண்டென்னும் நம்பிக்கை பிறத்தல்வேண்டும். தாமாக இயற்கையில் உண்டாகத் தக்கவைகளல்ல இவை. என்பது கருத்து.

(4) உலகவழக்கில் உரைக்கின்றபடி ஸிஸிரோ மிகவும் 'அழுத்தம்' உள்ளவன். தானே இவ்வுற்பாதங்களைக் கண்டிருந்தும், காஸ்க்கா விதிர்விதிர்த் துரைக்கக்கேட்டும், ஸிஸிரோ சிறிதும் கலங்கவில்லை. அறிவும் வயதும் அநுபவமும் முதிர்ந்த இராஜதந்திரி இந்த ஸிஸிரோ எந்த அற்புதத்தினாலும் அசையமாட்டான்.

(5) இந்தக் களத்தின் நிகழ்ச்சிகள் முன்களத்தைத் தொடர்ந்து அதேநாளில் நிகழ்வதுபோல் தோன்றினலும், உண்மையில் அதற்கும் இதற்கும் இடையே ஒரு மாதகாலங் கழிந்திருக்கவேண்டும். இவ்வண்ணம் ஷேக்ஸ்பியர் தன் நாடகங்களில் காலச்செலவு மயங்கும்படி நிகழ்த்துவதுண்டு. அதனைப் பின்னர் விரிவாக விளக்கிக் காட்டுவோம்.

(6) குரலால் என்னை நீ தெரிந்துகொண்டமையால் நுண்ணியசெவிப்புலன் உடையவன் நீ—என்பது பொருள்:

(7) வெளிப்படையாயில்லையேனும் காஸ்ஸியஸின் கருத்தை ஊகிப்பது அருமையன்று—நெருப்புமழை முதலிய இவ் வுற்பாதங்களால் உலகம் அழியப்போகின்றதென்பது தெரிகின்றது. தங்கள் உரிமைகளையெல்லாம் இழந்து அந்த ஸீஸர் ஒருவனுக்கே அடிமையாய்க்கிடக்க இசைந்திருக்கும் இவ்வுரோமாபுரி அழிந்துபோவதே தக்கதென்று உத்தமர்களெல்லாம் உவகை எய்துவார், என்ற பொருளை மனத்தில் வைத்துக் காஸ்ஸியஸ் இது இயம்புகின்றான்.

(8) இப்படியெல்லாம் நேரிடுமென்று யார்தான் எப்பொழுதேனும் எதிர்பார்த்திருப்பாரோ என்று வியந்த காஸ்க்காவிற்கு உரைத்த பதில் இது. குற்றங் குறைகள் இவ்வுலகில் நிறைந்துகொண்டு வருகின்றன வென்பதைத் தெரிந்துகொள்ளவல்லவர் இப்படி யொருநாள் அழிவு வரவேண்டுமென்பதையும் அறிந்திருப்பார், என்பது பொருள்.

(9) கவைதரு மின்னல்—பிளவுபட்டு வீசும் மின்னல், கொடிமின்னல் என வழங்கப்படுவது.

(10) ஸீஸருக்கு அடிமையாய் வாழவேண்டிய என் உயிரை வெறுத்து மாள்வதற்கே முயன்றேன், என்பது காஸ்ஸியஸின் உட்கருத்து.

(11) விண், என்பது இங்கு ஆகுபெயராய்த் தேவர்களைக் குறிக்கின்றது. வேண்டுமென்றே நீயேன் இப்படியெல்லாம் உன்னை ஆபத்திற் காளாக்கிக்கொண்டாய், என்பது பொருள்.

(12) இத்தகைய உற்பாதங்களால் நமக்கு விளைய இருக்கும் விபத்துக்களைக் காட்டி அச்சுறுத்துகின்றனர் தேவர். மனிதரோ அதுகண்டு நடுங்கவேண்டும். மற்று நீயேன், அஞ்சாமல் அவ்வாபத்துக்களை எற்றுக்கொள்ள அவாவினுய்.

(13) உயிர்ச்சுடர் என்பது—நுண்ணுணர்வு, சுருசுருப்பு, 'ரோஷம்' வன்மம் முதலியவைகளைக் குறிக்கின்றது.

(14) எதுகண்டும் அஞ்சாத ஆண்மை ரோமனுக்கு உரியதாயிருக்க நீயோ அதற்கு மாறாக ஒழுகுகின்றாய்.

(15) என் என் என், எனத்தொடரும் இவ்வாக்கியங்களின் இலக்கண அமைப்பு, முதல்நூலில் போன்றே இம் மொழிபெயர்ப்பிலும், மயங்கச் செய்கின்றது. இந்த உற்பாதங்களையே உதவியாகக்கொண்டு காஸ்க்காவை மயக்கித் தன் கட்சியில் சேர்த்துக்கொள்ள முயல்கின்றான் காஸ்ஸியஸ். அதற்கேற்றவாறு பரபரப்புடன் பேசும் இவன் வாக்கியங்கள் இலக்கணம்பிழைவது இயற்கையே.

(16) முதியோர் மதியற்றும் இளைஞர் கணித்தும்—என்னும் இது முதனூலிலும் விளக்கமின்றி நிற்கின்றமையால் அனேக பாடபேதங்கள் ஊகிக்கப்பெற்றுளது. எனினும், எல்லாம் தலைகீழ் முறையாய் நிகழ்வதுபோல், அறிவு வளர்ந்திருக்கவேண்டிய முதியோர் ஏன் மதியிழந்து போயினர், சிந்தனையின்றி ஒழுகுவதே இயற்கையாகிய இளைஞர் ஏன் ஆழ்ந்து சிந்திக்கத் தலைப்படுகின்னர்,—எனப் பொருள்கொள்ளலாம்.

(17) ரோமாபுரியில் முன், சபை மண்டபத்தருகில் மிருகக் காட்சிச்சாலையிருந்தது. அங்குக் கூண்டில் வைக்கப் பெற்றிருக்கும் சிங்கத்தைக் குறிக்கின்றான் போலும். அல்லது காஸ்க்கா பார்த்த சிங்கத்தைக் காஸ்ஸியஸும் பார்த்திருக்கலாம்

(18) இந்த இரவின் பயத்தையே ஸீஸரின் பயமாகக் காஸ்க்காவின் மனத்தில் மாற்றித் தூண்டவேண்டுமென்று முயல்கின்ற காஸ்ஸியஸ் எப்படி எப்படியோ சுற்றிச்சுழன்று, ஸீஸரையும் கொடிய அவ்விரவின் நிகழ்ச்சிகளையும் ஒன்றாய்ப் பிணைக்கின்றான். ஆயினும், காஸ்க்காவின் இணக்கத்தைத் தெரிந்துகொள்ளுமுன் 'ஸீஸர்' என்னும் பெயரைச் சொல்லாமல் பேசுமித் தந்திரம் கருதத் தக்கது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது)

பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்

தினகர வெண்பா

முன்னுரை

தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனருடைய அருமைத் திருக்குறளைத் தமிழறிஞர்கள் எவ்வாறெல்லாம் போற்றி வந்துள்ளார்கள் என்பதற்கு ஓர் அறிகுறியாகவுள்ளது இத் தினகரவெண்பா. இது போன்ற நூல்கள் தமிழிற் பலவுள்ளன. அவற்றுள் சோமேசர் முதுமொழி வெண்பா, சிவசிவ வெண்பா, இரங்கேச வெண்பா, வடமலை வெண்பா, திருமலை வெண்பா, திருப்புல்லாணி மாலை, முருகேசர் முதுநெறி வெண்பா, திருத்தொண்டர் வெண்பா, குமரேச வெண்பா: என்பன ஒரு சிலவாம். இவையேயன்றி, ஒவ்வொரு திருக்குறட்பாவையும் ஒவ்வொரு விருத்தத்தில் அமைத்து 1330 செய்யுட்களாலியற்றப்பெற்ற ஒரு பெருநூலும் உளது. இவற்றைக்குறித்து இந்நூலின் இறுதியில் எழுதப்பெறும் அநுபந்தத்திலே விவரமாய்க் கூறுவேன்.

இத் தினகர வெண்பா இதுவரை அச்சில் வெளிவராது மறைந்து கிடந்த அழகிய நூல்களில் ஒன்று. வள்ளுவரது நூற்கணுள்ள ஒவ்வோரதிகாரத்தினின்றும் ஒவ்வொரு திருக்குறளைப் பொறுக்கியெடுத்து அதனைப் பின்பாதியாகக் கொண்டுள்ள 133 வெண்பாக்களால் இயன்றுள்ளது இந்நூல். எட்டுப்பிரதிகளில் மிகைச்செய்யுட்கள் சிலவுங் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்து வித்வான் திருவாளர் அ. குமாரசாமிப்பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ள சதாசாரக்கவித்திரட்டு என்ற நூலிலும் புதுக்கோட்டை ஸ்ரீ. எஸ். இராதாக்கிருஷ்ண ஐயரவர்கள் வெளியிட்ட வாசகபுஸ்தகம் ஒன்றிலும் இந்நூலிலிருந்து ஒரு சில செய்யுட்கள் காணப்படுகின்றன.

இந்நூலின் ஆசிரியரது காலம் வரலாறு முதலியன யாதும் புலப்படவில்லை. பாட்டுடைத் தலைவனாகிய தினகரன் தென்கோவை நகரினனென்பதும் அச்சுதேந்திரன் என்னும் அரசனது சேனாபதியென்பதும் இந்நூற் செய்யுட்களால் உரைாலாவன. தென்கோவையென்பது கோயம்புத்தூரெனக் கொள்வாருமுளர். ஆனால் அதுபற்றி நிச்சயமாய்த் துணிந்து கூறுதல் ஏலாது. அச்சுதேந்திரன் விஜயநகரத்து அச்சுதராயராகவேனும் அல்லது தஞ்சை அச்சுதப்ப நாயக்கராகவேனும் இருக்கலாம். அவ்வாறாயின் இந்நூல் கி. பி. 16-ம் நூற்றாண்டின் மத்தியில் இயற்றப்பெற்றதாகல்வேண்டும்.

எனது நண்பர் திருவாளர் எம். பி. எஸ். துரைசாமி முதலியாரவர்கள் அன்புடனுதவிய இரண்டு ஏட்டுப்பிரதிகளின் துணையால் இந்நூல் இப்போது பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் ஒரு பிரதி கொல்லம் 1016 ௵ கார்த்திகைமீ 13௳ எழுதி முற்றுப்பெற்றது. பிறிதொரு பிரதியின் காலம் தெரிதற்கில்லை. ஆனால் அதனோடு சேர்த்துக் கோக்கப்பெற்றுள்ள 'நந்தி விளக்கம்' என்னுஞ் சிறு நூலின் முன்னேட்டில் 964௵ கலை௵ தைமீ 26௳ என்றெழுதியிருப்பதனால் அதன் காலமும் இதுவாகவே இருக்கலாம். இப்பிரதியிற் பொருட்பாலின் இறுதிவரையேயுள்ளது. தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல் நிலயத்தில் 3 பிரதிகள் உள்ளன. ஆனால் இவையனைத்தும் அபூர்த்தியான பிரதிகளே.

இந்நூலைக் கலாநிலயத்தில் வெளியிடுதற்கு இணங்கிய பத்திராசிரியரவர்களுக்கு என் நன்றியுரிமையாகின்றது.

காப்பு

1 முன்பாதி புன்சொல் முழுத்தமிழ்பின்பாதி
யின்பாந் தினகரனை யிங்கிதஞ்செய்—யென்பாவில்
வள்ளுவர்வெண் பாக்குறளை வைப்பதனாற் குற்ற
தள்ளுவர்தா னைப்பெருமாள் தான். [மெல்லாந்

குறிப்பு:— ஒவ்வொரு செய்யுளின் கீழும் இருதலைப் பகரத்துள் பாடபேதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எண்கள் செய்யுளிலுள்ள சீர்களின் எண்களாம்.

[3 முழுத்தமிழின். 5 யன்பாந். 6 தினகரா. 7 அங்கிதனால். 11 வைப்பக்கேள்.]

1. அறத்துப்பால்

அதிகாரம். 1. கடவுள்வாழ்த்து

2 உத்தமநால் கற்று முமாபதிக்கன் பில்லாத
சித்தருனக் கொவ்வார் தினகரா—எத்தனையுங்
கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.
[4 பில்லாச்.]

அதி. 2. வான்சிறப்பு

3 என்றுமுகி லைத்தொழுவா ரின்றனக்குத் தோற்றி
சென்றகவு மொன்னார் தினகரா—நின்று [ளம்புற்
விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.
[3 ரிங்குனக்குத். 4 தோற்றேபுற். 5 சென்றகவ்வு.]

அதி. 3. நீத்தார்பெருமை

4 தக்ககொடி மன்னவர்மீ தான்சினக்கி லக்கணமே
திக்குவிடப் போவார் தினகரா—ஒக்குங்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.
[1 தக்க கொடி. 2 மன்னவர்கள். 5 திக்குவிடம்.]

அதி. 4. அறன்வலியுறுத்தல்

5 வையகம் வாழ மனிதரெல்லாம் நல்லவறஞ்
செய்வதுவே நன்மை தினகரா—துய்ய
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.
[2 மேல்வாழ. 3 மானிடரே. 4 லாநலறஞ். 6 கோவைத்.]

அதி. 5. இல்வாழ்க்கை

6 என்போ டுருகுதவ மேதுக்கா மைந்தரொடுந்
தென்கோவை வாழுந் தினகரா—வுன்போல்
இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

அதி. 6. வாழ்க்கைத்துணைநலம்

7 இப்புவிமேற் பெண்பேச் செடுப்பதெல்லாம் பாவ
[மென்று
செப்புவர்காண் கோவைத் தினகரா—அப்படியேன்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.
[2 பெண்ணட, 8 அப்படியே.]

அதி. 7. புதல்வரைப்பெறுதல்

8 மைந்தரை நீபெற்றாய் மைந்தர்நடை கற்குமுன்னே
செந்தமிழைக் கற்றார் தினகரா—முந்தப்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

9 புத்திரரோ டுண்ணுத போசனமும் போசனமோ
சித்தருணு கோவைத் தினகரா—நித்தம்
அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

அதி. 8. அன்புடைமை

10 இவ்வாழி மண்டலத்தன் பில்லார்க்குன் செங்கோ
செவ்வாழி கண்டாய் தினகரா--ஒவ்வாதென் [லே
என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.
[4 செங்கோன்மை. 5 செவ்வாணி. 8 ஒவ்வாதோ.]

அதி. 9. விருந்தோம்பல்

11 நல்ல குணமும் நகைமுகமு மில்லைவர்பாற்
செல்ல வரிதே தினகரா—மெல்லவே
மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.
[4 மில்லார்பாற்.]

அதி. 10. இனியவைகூறல்

12 கொய்யுளைவே ழம்பொன் கொடுப்பதினுமின்சொ
செய்வதுவே நன்மை தினகரா—டைய [லுரை
அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

அதி. 11. செய்ந்நன்றியறிதல்

13 புந்திசெய்ய நன்மையே பொல்லாங் கெனச்சிறிது
சிந்தைசெய்ய லாமோ தினகரா—சந்ததமும்
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.
[1 புந்திசெயல். 5 சிந்தைசெய.]

12. நடுவுநிலைமை

14 ஏந்துமுலை மின்னார்க் கிடைநடுவு நின்றமையாற்
றேய்ந்துமழ காச்சே தினகரா—போந்த
கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.
[8. போந்து]

அதி. 13. அடக்கமுடைமை

15 நல்வசனஞ் சொல்லி நயந்தோர் தனைவணங்கல்
செல்வ முனக்கே தினகரா—அல்லவே
எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.
[4 தலைவணங்கச். 8 அல்லவோ.]

அதி. 14. ஒழுக்கமுடைமை

16 நாகரிக ரானலென் நற்குலத்த ரானலென்
சீகருணை கோவைத் தினகரா—ஆகும்
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.
[8 வாகாரும்.]

அதி. 15. பிறனில்விழையாமை

17 நொய்துகொண்டுவாசவன்மெய் நூறு யிரம்பழுது
செய்துகொண்டான் கோவைத் தினகரா-வெய்தல்
எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.
[8 வெய்தி.]

அதி. 16. பொறையுடைமை

18 ஆர்க்கும் பொறுமை யழகியதே யாகாது
தீர்க்க வயிரந் தினகரா—பார்க்குள்
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க
பொன்றுந் துணையும் புகழ். [குப்
[14 தனையும்.]

அதி. 17. * அழுக்காறமை

19 மாசுடையார் வாழ்வுமொரு வாழ்வோ மணிவயி
தேசுடைய கோவைத் தினகரா—பேசுங்கால்[ரத்
அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.
[2 வாழ்வொருவாழ். 3 வாமோ. 5 தேசுடையாய்.]

அதி. 18. வெஃகாமை

20 நானுசை கொண்டிருக்க நாணைப் பரத்தையர்வா
தேனுசை கொண்டாய் தினகரா—ஆனாலுஞ்[ய்த்
சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

அதி. 19. புறங்கூறாமை

21 ஏதிலார் பொல்லாங் கெடுத்துரைப்பார் தம்
தீது குறியார் தினகரா—யாதும் [முடைய
பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறந்தெரிந்து கூறப் படும்.
[1 ஏதுடையார். 9 புறம்பழி.]

அதி. 20. பயனிலசொல்லாமை

22 ஓர்ந்துணர்ந்து கொண்டுபய னுண்டாக வோர்வச
தேர்ந்துசொல்ல வேணுந் தினகரா-சோர்ந்த [னந்
பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.
[3 னுண்டாகி. 4 லோர்வசனந். 8 சேர்ந்த.]

அதி. 21. தீவினையச்சம்

23 ஆவலுடன் ஓடி யலைந்து திரிந்தாலுந்
தீவினைதான் போமோ தினகரா—பூவி
லெனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.
[2 தேடி. 6 போமே. 10 யெல்லாரு. 15 றிடும்.]

அதி. 22. ஒப்புரவறிதல்

24 இன்னா ரினியா ரிவரென்று சற்காரஞ்
செய்நாக ரீகா தினகரா—பொன்னுல
புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.
[4 தற்காரந். 5 தென்னுக. 8 என்னுனப்.]

அதி. 23. ஈகை

25 மானிடர்க்கு னுன்போல் வரையாத் தியாகமற்றத்
தீனரிடத் துண்டோ தினகரா—தேனே
இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.
[1 மானிடர்க்கும். 2 போல. 4 தியாகிமறுத். 8யேனம்.

அதி. 24. புகழ்

26 †கையாற் பரிந்தழைக்கக்கண்டுகுழந்தைச்சோமன்
செய்யசுட்டி யீந்தான் றினகரா—வையத்துத்
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

---

* அழுக்கறாமை

† இச்செய்யுள் எட்டுப்பிரதிகளிற் காணப்பெறவில்லை; செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடப் பெற்றது.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினுல் வெட்கக்கேடு. கல்லாதவர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5 மெய்ம்மையை அமைரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கடடணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

தவளைகள் உணவு ஒன்று மில்லாமல் 16 மாத காலம் உயிரோடிருக்கு மென்று ஒரு பத்திரிகை கூறுகின்றது.

***

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் அரசாட்சி ஏற்படுமுன் வங்காளத்தில் 80 ஆயிரம் பாடசாலைகள் இருந்தனவென்று கணக்கெடுக்கப் பட்டிருக்கின்றது.

***

ரேடியம் என்னும் உலோகத்தின் துணையினுல் நல்ல வைரத்தை மரகதமாக மாற்றிவிடலாமாம். அமெரிக்காவில் இவ்வேலையில் பலர் ஈடுபட்டிருக்கின்றனராம்.

***

தென் அமரிக்காவில் பெரு என்னுமிடத்தில் ஒரு பூகம்பம் ஏற்பட்டதென்றும், அதனுல் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் அதிகம் என்றும் தெரிகின்றது.

***

மணிக்கு 800 மைல் வீதம் பறக்கும் ஸ்டராட்டாஸ்பியர் (Strotos phere) என்னும் புதிய விமானங்கள் கட்டப்படுகின்றனவென்றும், அவை சீக்கிரத்தில் பரிக்ஷார்த்தமாகப்பறக்கவிடப்படும் என்றும் தெரிகின்றது.

***

பர்மாவிலுள்ள மோல்மீன் நகரத்திற்கு அருகாமையில் ஓரிடத்தில் வெந்நீர் ஊற்று ஒன்று தோன்றியுள்ளதாம். தண்ணீர் புகையுடன் வெளிவருகின்றதாம். தண்ணீர் தங்குமிடங்களில் கந்தக நாற்றம் வீசுகின்றபடியினுல் இரசாயனிகள் இங்கே கந்தகம் அகப்படும் என்று கூறுகின்றார்களாம். அரசாங்க இரசாயன ஆராய்ச்சியாளர் பரிட்சை செய்துவருகின்றனராம்.

***

கம்பியில்லாத் தந்தியின் மூலம் உருவப்படங்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அனுப்ப முடியுமென்று ஒரு ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் தார்டன் பேக்கர் என்பார் கூறுகின்றார். சமீபத்தில் பரிக்ஷார்த்தமாக அமெரிக்காவிலிருந்து ஒரு படம் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு அது ஆங்கிலப் பத்திரிகை ஒன்றினுல் வெளியிடப் பட்டதென்று தெரிகின்றது.

***

அமெரிக்கா ஐக்கிய நாட்டில் 1931-வது வருடத்தில் மோட்டார் வண்டியால் கொல்லப்பட்டவர்களின் தொகை 3400. காயமடைந்தவர்களின் தொகை தெரியவில்லை 1930-வது வருடம் மோட்டார் வண்டியால் கொல்லப்பட்டவர்களின் தொகையைக் காட்டிலும் 1931-இல் 100-க்கு 2 வீதம் அதிகமாகும். கடந்த ஐரோப்பிய யுத்தத்தில் இறந்த அமெரிக்க வீரர்களின் தொகைக்குச் சிறிதுதான் இத்தொகை குறைவு என்று ஒரு பத்திரிகை கூறுகின்றது.

***

சென்னை அரசாங்கத்தார் தற்காலப் பொருளாதார நிலையைஒட்டிச் செய்தஏற்பட்டால் போதுமானபடி செலவு குறையவில்லை யாதலால் மீண்டும் செலவைக் குறைக்க யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இது [illegible] வரையில் கிராமஉத்தியோகஸ்தர்கள் [illegible] குறைக்கப்படவில்லை. ரெவனியு டி[illegible] இனிச் செய்யவேண்டிய சிக்கன முறையைப்பற்றிச் சிக்கனக் கமிட்டியார் செய்த சிபார்சுகளாவது:—

கிராமஉத்தியோகஸ்தர்களைக் குறைப்பதால்ரெவனியுவேலை கஷ்டப்படும். எனவே உத்தியோகஸ்தர்களைக் குறைப்பதைக்காட்டிலும் சம்பளத்திற் சிறிது குறைவு செய்தல் நலம். ரூ 6 ல் இருந்து ரூ 12வரையில் சம்பளம் வாங்குபவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு அணு 4ம், 13 ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்குபவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு அணு 8-ம் குறைவுசெய்யலாம். அப்படிச் செய்வதால் 4 லட்ச ரூபாய் எஞ்சும்.

ரெவனியு டிபார்ட்டுமெண்டில் கலெக்டர், சப்கலெக்டர், டிப்டி கலெக்டர், தாலுக்கா நிலயங்கள் முதலிய ஸ்தலங்களிலும் சம்பளக் குறைவும் செலவுக் குறைவும் செய்யலாம். கலெக்டர் நிலயத்திலும் டிப்டி பொக்கிஷதார் நிலயத்திலும் சேவகர்கள் சிலரை எடுத்துவிடலாம். இப்படிச் செய்வதால் 2½ லட்சம் ரூபாய் செலவு குறையும். ஆடு மாடுகளை அடைத்துவைக்கும் பட்டிகளில் இப்பொழுது இருந்துவரும் கட்டணங்களை 100-க்கு 100 வீதம் உயர்த்திவிடலாம்.

***

மதிப்புரை:—'பகவத்கீதை-வசன சங்க்ரஹம்' என்ற ஒரு நூல் எமது பார்வைக்கு வந்தது. இந்நூலை ஆக்கியவர் திரு. அ. சிவாநந்தசாகர யோகீச்வரர் மருகரும் மாணாக்கருமாகிய வரகவி. திரு. அ.சுப்பிரமணிய பாரதியார். பல நாவல் நூல்களையும் நாடகநூல்களையும் இவர் வரைந்துள்ளாராதலால் இவரைத் தமிழுலகம் நன்குறியும். ஸ்ரீமான் பாரதியார் இந்நூலில் கீதையின் பொருளையும், அதைக் கண்ணபிரான் அர்ஜுனனுக்கு ஓத நேர்ந்ததையும், பகவான் வகுத்துள கர்மம் ஞானமாதி யோகங்களையும், எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறுவிளக்கி, கருமமார்க்கமே சிறந்ததும்எளியதும் என்பதையும், உலகத்தார் நன்மையின் பொருட்டு ஞானியும் கருமம்செய்யவேண்டுமென்பதையும், அதுவே கீதையின் கருத்து என்பதையும் செவ்வனே விளக்கியுள்ளார். இவ்விஷயங்கள், விஷாதயோகம், சாங்கியயோகம், கர்மயோகம், ஞானயோகம், கர்மஸந்யாஸயோகம், ஆத்மஸம்யமயோகம், விக்ஞானயோகம், அக்ஷர பரப்பிரம்மயோகம், இராஜவித்யா ராஜகுஹ்யயோகம், விபூதியோகம், பக்தியோகம், என்ற பல தலைப்புக்களின்கீழ் விளக்கியுள்ளார். அஞ்ஞானத்தின் பாற்பட்டுப் போர்க்களத்தில் போர்செய்ய மயங்கின அர்ஜுனன் பகவான்ஓதிய கீதையைக் கேட்டபின் ஞானம்பிறக்கத் தனது தர்மத்தைச்செய்ய முற்பட்டான். கீதையின் கருத்தைத்தெரிந்துகொண்டால் பின் அந்த அரிய நூலை முழுதும் கற்று அறியவேண்டும் என்னும் ஆர்வம் எல்லார் உள்ளத்திலும் ஏற்படுவது இயலக்கூடியதே. எனவேஇந்நூல் இவ்வழியில் பயன் பெரிது அளிக்கக்கூடியதாகும். நயமுடைய நடையில் எல்லாரும் எளிதில் விஷயத்தை உணர்ந்து கொள்ளும் பான்மையில் ஆக்கப்பட்ட இந்நூலை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். தமிழரானோர் இதைப் படித்துப் பயனடைய வேண்டுமென்பதே எமது விழைவு.

இப்புத்தகம், 286, எஸ்பிளனேட், K. முனுசாமி நாயுடு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டுளது. விலை [illegible] வேண்டுவோர் மேற்படி கம்பெனியாருக்கோ [illegible] சாலை, பொம்பூரிலிருக்கும் ஆசிரியருக்கோ [illegible] பெற்றுக்கொள்ளலாம்.

KALANILAYAM
REG. NO. M, 2324.

—: வைத்திய ரத்ன :—

பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

ஜீவாமிருதம்



பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

கேட்லாக் இலவசம்

தபால் பெட்டி. 287. மதருஸ்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு		விலை வெளிநாடு
,, 9-0-0	அரைலெதர் பயிண்டு	,, 10-8-0
,, 8-8-0	காலிகோ	,, 10-0-0
,, 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும். தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலாநிலயம்,
புரசை, சென்னை.

3

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

ஏற்படுத்தியது] நாஷனல் [1906

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷணை குடும்பச் சேமிப்பு
இவைகளுக்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஆஸ்தி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை
நாஷனல் நெருப்பு
& ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார்
கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச்செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)